Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
13 Edition
JITF 2023
MARCH மார்ச் 3 4 5
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம்
இன்னும் 2 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Registered as a Newspaper

# உதயன்

புதன் பொய்கை

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 95

புதன்கிழமை 01 மார்ச் 2023 | மாசி 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 16

யாழ். மாநகரசபையில்

## மீண்டும் கவிழ்ந்தது ஆர்னோல்டின் பாதீடு

### ஒரே ஆட்சிக்காலத்தில் இரு தடவைகள் பதவியிழந்த 'முதல்' முதல்வர்



யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ். மாநகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மூன்றாவது தடவையாகவும் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டது. இதனூடாக யாழ். மாநகர முதல்வர் பதவியை »15

விரிவுகள்:- பக் - 15 இல்

## வங்கிப் பணியாளர்கள் பணிக்கு வருவார்கள்

நம்புகின்றனர் இலங்கை வங்கி, மக்கள் வங்கித் தலைவர்கள்

## வரி அதிகரித்தும் வருமானமில்லை: தேர்தலுக்கு நிதி வழங்கமுடியுமா?

கேட்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

30 தொழிற்சங்கங்கள் இணைந்து

# இன்று வேலைநிறுத்தம் இலங்கை ஸ்தம்பிக்கும்?

### 12 மாவட்டங்களில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 1
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் முறையற்ற வரி விதிப்பு கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதனை மீளப்பெறுமாறு வலியுறுத்தியும் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் இன்று நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்புவாழ்வு முடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. »15

## புதிதாக பத்துப் பேர் அமைச்சர்களாவர்

பொருளாதார நெருக்கடிக்குள்ளும் பெரமுனவின் கிளுகிளுப்பு

விரிவு:- பக்.15

## மாநகரசபை கலையாது முதல்வர் தெரிவு நடக்கும்

துறைசார் அதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 1
தொடர்ச்சியாக யாழ். மாநகரசபை முதல்வர்கள் முன்வைத்த வரவு - செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் »15

## தொழிற்சங்க நடவடிக்கையால் நீங்கள் சாதிக்கப்போவது என்ன?

இன்றைய போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் கேள்வி

கொழும்பு, மார்ச் 1
ஒருநாள் தொழிற்சங்க நடவடிக்கைமூலம் நீங்கள் சாதிக்கப்போவது என்ன? அன்று வரியை நீக்கியமையால்தான் நாடு வங்குரோத்து அடைந்தது. அதனை »15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் வலையமைப்பு இப்போதும் இயங்குகிறது!

## அமெரிக்கா தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 1
விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்படுகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் தொண்டு நிறுவனங்களை பயன்படுத்தி நிதிதிரட்டி தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா நேற்று வெளியிட்ட பயங்கரவாதம் குறித்த அறிக்கையிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

2009ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் இராணுவ ரீதியில் தோல்வியடைந்த போதிலும் விடுதலைப்புலிகளின் சர்வதேச ஆதரவாளர்கள் வலையமைப்பும் நிதி ஆதரவும் தொடர்கின்றது. ஆயினும், ஆயுதங்களின் அளவில் 2009ஆம் ஆண்டுமுதல் விடுதலைப்புலிகள் அமைப்பு செயற்பாடின்றி உள்ளது. 2009ஆம் ஆண்டின் பின்னர் விடுதலைப்புலிகள் அமைப்பு இலங்கையில் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் எந்தத் தாக்குதல்களும் இல்லை - என்றுள்ளது. (ம)




## பொலிஸாரின் அத்துமீறல் மன்னிப்புச்சபை கண்டனம்

கொழும்பு, மார்ச் 1
ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராகப் பலத்தைப் பிரயோகிக்கும்போது நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும்போது கட்டுப்பாட்டைப் பின்பற்றவேண்டியது குறித்து மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியது கவலையளிக்கின்றது என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆர்ப்பாட்டங்களுக்கான உரிமை தொடர்பான பிராந்திய அவதானிப்பாளரான ஹரிந்திரினி தெரிவித்ததாவது:

கொழும்பில் பொலிஸார் மேற்கொண்ட சட்டவிரோத கண்ணீர்ப்புகை பிரயோகம் நீர்த்தாரைப் பிரயோகம் காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியைத் தருகின்றது. இலங்கையில் இத்தனை ஆர்ப்பாட்டங்களின் பின்னரும், ஆர்ப்பாட்டமொன்றைக் கட்டுப்படுத்தும்போது பொலிஸார் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் தொடர்பில் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டியிருப்பது கவலையளிக்கின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், ஒரு பகுதிக்குள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதையும் அவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாத நிலை காணப்படுவதையும் வீடியோ காண்பித்துள்ளது. அவ்வாறான சூழ்நிலையிலும் பொலிஸார் கண்மூடித்தனமான தாக்குதலையே மேற்கொண்டனர். அமைதியான ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்களுக்கு எதிரான பரந்துபட்ட வன்முறைகள் இல்லாதபோது கண்மூடித்தனமான விளைவுகளை கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது. ஆர்ப்பாட்டத்தின் சூழமைவில் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும், உயிரிழப்பு குறித்தும் பக்கச்சார்பற்ற விசாரணைகள் இடம்பெறவேண்டும் - என்றார். (ம)

## பெரமுனவினால் இலங்கை வங்குரோத்தடையவில்லை

### சாகர கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 1
பொதுஜன பெரமுனவால் நாடு வங்குரோத்தடையவில்லை. நாடு வங்குரோத்தடைவதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்குமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளோம் என்று தெரிவித்தார் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரான சாகர காரியவசம்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருட கால யுத்தத்தை வெற்றிகொண்டு நாட்டின் இறையாண்மையை பாதுகாத்த ராஜபக்சக்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் மீண்டும் அதே குற்றச்சாட்டுக்களை முன்வைக்க ஆரம்பித்துள்ளார்கள். பொய்யான குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்சக்கள் பொறுப்புக் கூறவேண்டும். நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு யார் காரணம் என்பதை ஆராய நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவை அமைக்குமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

பொதுஜன பெரமுனவுக்கு எதிராக திட்டமிட்ட வகையில் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ம)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமைச்சரவையால் அனுமதி!

கொழும்பு, மார்ச் 1
பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக, புதிதாக முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை மீளக் கட்டமைப்பதற்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார்.

இலங்கையில் தற்போது அமுலில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என பல தரப்பினரும் வலியுறுத்தினர். இதனையடுத்து அதனை நீக்குவதற்கும், புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

## பாகிஸ்தான் கடற்படைத்தளபதி ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார்

கொழும்பு, மார்ச் 1
பாகிஸ்தான் கடற்படைத்தளபதி அட்மிரல் முகமட் அம்ஜத்கான் நிஸாய், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான பிராந்திய கடல் ஒத்துழைப்பு, கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது போன்ற விடயங்கள் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன. சந்திப்பில் இரு கடற்படைகளையும் சேர்ந்த உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ம-14-6)

## இலங்கையின் கடன்நெருக்கடிக்காக விரைந்து தீர்வுகாண்பதற்குத் தயார்!

இலங்கையின் கடன் நெருக்கடி நிலைக்கு உடனடியாகத் தீர்வுகாண்பதை முன்னிறுத்தி செயற்படத்தயாராக இருப்பதாக ஜி20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் பெங்களூர் நகரில் கடந்த 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில், கடன்நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு உதவுதல், அதனை [illegible] உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டின் பெறுபேறு குறித்த ஆவணம் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் வாசிக்கப்பட்டது. அதில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் முகங்கொடுத்திருக்கும் கடன்நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'கடன்நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குரிய தீர்வை அனைவ[illegible]ணைந்து பெற்றுக்[illegible]ற்கு உத்தியோகபூர்வ இருதரப்பு மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் கூட்டாக இணைந்து பல்தரப்பு ஒருங்கிணைவை வலுப்படுத்துவது அவசியமாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் 'கடன் கைவிடுகைக்கு அப்பால் கடன்நெருக்கடியைக் கையாள்வதற்கான பொதுச்செயற்றிட்டத்தை உருவாக்கல்' என்ற அடிப்படையின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்துக் கடப்பாடுகளையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அதேபோன்று அந்தப் பொதுச் செயற்றிட்டத்தை உரியவாறான காலப்பகுதியில், முன்னெதிர்வு கூறக்கூடிய அடிப்படையில், ஒருங்கிணைந்த முறையில் அமுல்படுத்த வேண்டும் என்று அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைமடிப் படகுகளால் மீன், நண்டுகள் கொள்ளை

## குருநகர் படகுகள் பட்டப்பகலில் அத்துமீறல் தீவக மீனவர்கள் ஆதாரத்துடன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 1

குருநகர் மீனவர்களின் உள்ளூர் இழுவைமடிப் படகுகளால் தீவகத்தின் கடல்வளங்கள் சூறையாடப்படுகின்றன என்று தீவக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். கடற்கரையிலிருந்து மிகமிக நெருக்கமாக இழுவைமடித் தொழிலில் அந்த மீனவர்கள் ஈடுபடுவதால் சிறிய மீன்கள் மற்றும் நண்டு வளர்ப்பு என்பன முழுமையாக அழிக்கப்படுகின்றன என்றும் தீவக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சுபத்தின்பிள்ளை ஜோன்பொஸ்கோ உதயனுக்குத் தெரிவித்ததாவது:

உள்ளூர் இழுவைமடிப் படகுகளால் அனலைதீவின் கடல்வளங்கள் சூறையாடப்படுகின்றன. கடந்த நான்கு நாள்களாக தீவகத்தில் தொழில்செய்துவந்த குருநகரைச் சேர்ந்த உள்ளூர் இழுவைமடிகள் நேற்று (நேற்றுமுன்தினம்) பிற்பகல் 3 மணியளவில் கடற்கரையிலிருந்து மிகமிக நெருக்கமாக நின்று மடி விரித்தன. கடற்கரையிலிருந்து 6 கிலோமீற்றருக்கு அப்பால்தான் இழுவைமடி போடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் இந்த அத்துமீறலால் எமது கடல்வளம் படிப்படியாக அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அவர்களின் அத்துமீறலை நாம் வீடியோவாகப் பதிவுசெய்துள்ளோம். இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடமும் திணைக்களங்களிடமும் முறையிட்டுள்ளோம்.

அரச ஆதரவுக் கட்சியொன்றின் ஆதரவுடன்தான் இந்த அத்துமீறல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தீவக மீனவர்களை மீண்டும் மீண்டும் சீண்டும் செயற்பாடாகும். எனவே உரிய திணைக்களங்கள் இது தொடர்பில் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ம-125)

## மின்விளக்கு திருட்டு: சந்தேகநபர் கைது!

சாவகச்சேரி பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதி மின்விளக்கைத் திருடி வேறு இடத்தில் பொருத்தியபோது, இளைஞர் ஒருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஒப்படைக்கப்பட்டார்.

சாவகச்சேரி பிரதேசசபையால் எருவன் பிள்ளையார் கோயிலுக்கு எதிரே உள்ள மின்கம்பத்தில் பொருத்தப்பட்ட மின்விளக்கை இளைஞர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருடியுள்ளார்.

அதன்பின்னர் மின்விளக்கைகரம்பைக்குறிச்சி மேற்கு வரணிப் பகுதியில் தனிநபருக்குரிய இடத்தில் பொருத்திய வேளை அந்தப்பகுதி பிரதேசசபை உறுப்பினரால் இளைஞர் கையும் மெய்யுமாக மடக்கிப்பிடிக்கப்பட்டார். அதனையடுத்து சாவகச்சேரி பிரதேசசபை செயலருக்கு அறிவிக்கப்பட்டு பிரதேச சபைச் செயலரின் அனுமதியுடன் சந்தேகநபரான இளைஞர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,159)

*உலகவங்கி ஒதுக்கிய நிதியில்*

## வன்னேரிக்குளம் மருத்துவமனையின் நிர்மாணப் பணியைத் துரிதப்படுத்துக

*சுகாதார அமைச்சருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்*

கிளிநொச்சி, மார்ச் 1

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள வன்னேரிக்குளம் பிரதேச மருத்துவமனையின் கட்டடம் இடிந்து விழும் அபாய நிலையில் காணப்படுகிறது. மருத்துவமனையின் நிர்மாணப் பணிகளுக்கென உலகவங்கியால் ஒதுக்கப்பட்ட நிதியில் இன்னமும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே நிர்மாணப் பணிகளைவிரைந்து மேற்கொள்ளவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மத்திய சுகாதார அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

70 வருடகாலமாக புனரமைப்பின்றிக் காணப்படும் இந்த மருத்துவமனையின் கட்டடம் இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது. அதன் காரணமாக நோயாளர்கள் அச்சத்தின் மத்தியிலே சிகிச்சைபெற்று வருகின்றனர். அடிப்படை சுகாதார சேவைகளைக்கூட பெற்றுக்கொள்ளமுடியாது அவர்கள் அவதியுறுகின்றனர். இந்த இடர்நிலை குறித்து சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மருத்துவமனையின் புதிய கட்டட நிர்மாணத்துக்கென ஆரம்ப சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ் உலகவங்கியால் 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆயினும் இந்த நிதியில் புனரமைப்புப் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக ஒதுக்கப்பட்ட நிதியை மீளப்பெறும் நிலை உருவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. போரால் முழுமையாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்துக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட நிதியை மக்களுக்கான திட்டங்களுக்கு பயன்படுத்துவதில் அதிகாரபீடங்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன. எனவே வன்னேரிக்குளம் மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களின் அவலநிலையை கருத்திற்கொண்டு உலக வங்கியால் ஒதுக்கப்பட்ட நிதியில் மருத்துவமனையின் கட்டட நிர்மாணப் பணிகளை துரிதமாக்க உரிய அதிகாரிகளுக்கு தங்களால் பணிப்புரை விடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ச-113)

## பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடையவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 1

வட்டுக்கோட்டைப் பகுதியில் பல திருட்டுக்களுடன் தொடர்புடைய நபரொருவர் அனலைதீவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் பல்வேறு திருட்டுக்களில் ஈடுபட்ட மூ[illegible] தியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபர், ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனலைதீவுப் பகுதியில் தலைமறைவாகி இருந்தார். சந்தேகநபருக்கு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் சந்தேகநபர் அனலைதீவில் வைத்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து [illegible] மீட்கப்பட்டன. (ம-14)

## பாடசாலை தெரியாமலேயே கௌரவிப்புக்கு நிதி சேகரிப்பு

*இறம்பைக்குளம் அதிபர் தெரிவிப்பு*

வவுனியா, மார்ச் 1

பாடசாலை நிர்வாகத்துக்குத் தெரியாமல் ஆசிரியரைக் கௌரவிப்பதற்காக நிதி சேகரிக்கப்பட்டுள்ளது என்று வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் பெற்றோரால் ஆசிரியரை கௌரவிக்கும் முகமாக தங்க நகையொன்றை வழங்குவதற்காகவும் நிதி சேகரிக்கப்பட்டதாக வெளிவந்த செய்தி தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பாடசாலைக்கு எவரிடம் இருந்தும் அநாவசியத் தேவைகளுக்காக நிதி கோரப்படுவதில்லை. அத்துடன் மாணவர்கள் அல்லது பெற்றோர் எந்தவித பொருள்களையும் அநாவசியமாக பாடசாலைக்குக் கொண்டு வருதலோ, பாடசாலையின் பெயரைப் பயன்படுத்துவதையோ தவிர்க்கவேண்டும் எனப் பல தடவைகள் தெரிவித்துள்ளேன்.

இந்த நிலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்குக் கற்பித்த ஆசிரியரைக் கௌரவிப்பதற்காக சில பெற்றோர் நிதி சேகரித்ததாகவும் ஓர் ஆசிரியருக்கு நிகழ்வு நடத்தப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பாக பாடசாலை அதிபரான எனக்கோ பகுதித் தலைவர் மற்றும் ஆரம்பப் பாடசாலை அதிபருக்கோ தெரியப்படுத்தப்படவில்லை. எனினும் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. பாடசாலையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகளை பாடசாலை நிர்வாகம் கண்டிப்பதோடு, இதுதொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடலொன்றையும் நடத்தவுள்ளேன் - என்றார். (ம-14,110)

## 5 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது!

5 கிலோகிராமுக்கும் அதிகமான கஞ்சாவைக் கடத்திச்சென்ற சந்தேகநபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அக்கரைப்பற்று இராணுவப் புலனாய்வுப்பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரதேச அபிவிருத்தி வங்கியின் புதிய தலைவராக சுசந்த சில்வா

நாட்டின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான, பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஏழாவது தலைவராக சுசந்த சில்வா கடந்த மாதம் 21ஆம் திகதி பதவியேற்றார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவி உட்பட பல பிரதான நிறுவனங்களில் நிறைவேற்று மட்டத்தில் பல்வேறு பதவிகளை வகித்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்துறைகளில் 40 வருட அனுபவத்துடன் தனது கடமைகளை ஆரம்பித்த சுசந்த சில்வா ஊழியர்கள் மத்தியில் உரையாற்றியபோது, 'நிலவும் சவால்களை வென்று நாட்டின் அபிவிருத்திக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியின் பங்களிப்பை குறைவின்றி நிறைவேற்ற தற்போதிலிருந்தே செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குத் தயார். அத்தோடு அலுவலக ஊழியர் குழாமுடன் இணைந்து திருப்திகரமான சேவைகளை மக்களுக்கு வழங்குவதன் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் குறியீடு அழியாமல் உயர்ந்த நிலையில் இருப்பதற்கு உத்தரவாதம் வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

களனியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் புதிய தலைவ்ரை வரவேற்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் வங்கியின் பொதுமுகாமையாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமையாற்றுபவர்) சுமேத ஏதிரிசூரிய, பிரதி பொது முகாமையாளர்கள் உட்பட பிரதான அலுவலகத்தின் ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ம)

# ஜப்பான் தூதுவராலய அதிகாரிகள் பல்கலை மாணவர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், ஜப்பான் தூதரக அதிகாரிகள் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றது.

இதன்போது சுதந்திரதினத்தில் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் நோக்கம் பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் வடக்கு -கிழக்கு சார் பொதுஜன வாக்கெடுப்பின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மேலும் வடக்கு-கிழக்கு தழுவிய திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், நிலஅபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர், மகாவலி அபவிருத்தித் திட்டமும் திட்டமிட்ட சிங்கள மயமாக்கமும், மட்டக்களப்பு மயிலத்தமடு மேய்ச்சல் தரவை பிரச்சினைகள், தமிழ் மாணவர் சமூகத்தின் மீதான அரச அடக்குமுறைகள் எனப் பலதரப்பட்ட விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

சந்திப்பில் ஜப்பானிய தூதுவராலய அரசியல் ஆய்வாளர் ஹனா, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சில்வஸ்டார் ஜெல்சின், உபதலைவர் இரா.தர்ஷன், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-14,125)

# வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 1

வடக்கு மாகாணத்தில் இன்று மழைக்குச் சாத்தியம் உள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

நாட்டில் பரவலாக மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது. வடமாகாணத்தில் முல்லைத்தீவில் சற்று அதிகரித்த மழை வீழ்ச்சியும் இதர இடங்களில் மழைக்குச் சாத்தியமும் காணப்படுகின்றது. மேல் மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)



முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும், புலம்பெயர்ந்து சுவிற்சர்லாந்தில் வசித்து வருபவருமான தேவராஜா நிஷாந்தனின் நிதியுதவியில், முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்துக்கு 2 மின்மாணிகள் மற்றும் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. (ம-14)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவகால முன்னேற்பாட்டுக் கூட்டம் மற்றும் உபயகாரர் கலந்துரையாடல் என்பன ஆலய அன்னதான மண்டபத்தில் கடந்த 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ய-66)



'விதையனைத்தும் விருட்சமே' குழும அணியினரும் கருகம்பனை பொதுஅமைப்புக்களும் இணைந்து நடத்திய குருதிக்கொடை முகாம் யாழ்.கீரிமலை கருகம்பனை நூலகத்தில் கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-66)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நல்ல நாள். முடிவுகள் நல்லபடியாக அமையும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் துணையிருப்பார்.

**கடகம்:** உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சில பிரச்சினைகள் ஏற்படும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.. உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. குடும்பத்தினரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். அலைச்சலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். பேசும்போது பொறுமை தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இலங்கைக் கடலும் இந்திய றோலரும்!

இந்திய மீனவர்கள் இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவது இன்னமும் பரிசீலனையிலேயே உள்ளது. வடக்கு மீனவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில்தான் இந்த நடவடிக்கை (இந்திய மீனவர்களுக்கான அனுமதி) முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்திய மீனவர்களை வடக்குக் கடற்பரப்பில் அனுமதிப்பது தொடர்பான விவாதங்களும் எதிர்ப்புக்களும் நாளுக்குநாள் வலுவடைந்து வரும் நிலையில், நாட்டின் உயர் அதிகாரப்பீடத்தால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இந்தக் கருத்து, வலுவானது என்பது மட்டுமல்லாமல் பலரின் பொருளாதாரத்தையும் நாட்டின் தலைவிதியையும் தீர்மானிக்கவல்லது. ஆதலால், 'பொதுக்குரலின் கீழான' வலுவான எதிர்ப்பொன்று இதற்குப் பதிவுசெய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளைஅனுமதிப்பதென்பதுவடக்குமீனவர்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகச்சிதைக்கும் செயல்தான். நேற்று முன்தினமும் இந்திய இழுவைப்படகுகள் தாயக மீனவர்களின் வலைகளை நாசம் செய்துவிட்டுச் சென்றிருக்கின்றன. இவ்வாறிருக்கையில், 'வடக்குமீனவர்களுக்குப்பாதிப்பில்லாத வகையிலான மீன்பிடி' என்ற 'கருத்துத் திணிப்பே' இங்கு தேவையற்றதுதான். வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு தற்போது அனுமதிகள் எதுவும் இல்லை. அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் சிறைப்படுத்தப்படுவதுடன் அவர்களின் படகுகள், மீன்பிடிச் சாதனங்கள் என்பன தற்போது இலங்கை அரசாங்கத்தால் அரசுடமை ஆக்கப்படுகின்றன. இவ்வாறான இறுக்கமான நடைமுறைகளும் பொறிமுறைகளும் நடைமுறையில் இருக்கும்போதே இந்திய மீனவர்களின் அத்துமீறலும் அதனால் கடற்பகுதிகளில் ஏற்படும் வாக்குவாதமும் மோதலும் தாராளமாகத்தான் இருக்கின்றது. இவ்வாறிருக் கையில் 'நிபந்தனைகள்' என்ற பெயரில் எதையாவது சொல்லி, இந்திய மீனவர்களை அனுமதித்தால் அது எவ்வாறு வடக்கு மீனவர்களைப் பாதிக்காதிருக்கும்?

முற்றான தடைகள் இருக்கும்போதே அந்தத் தடைகளை உடைத்து அத்துமீறும் இந்திய மீனவர்கள், நிபந்தனை களுடனான அனுமதி வழங்கப்பட்டால், இன்னுமின்னும் அத்துமீறவே செய்வார்கள். இது வடபகுதி மீனவர்கள் தங்கள் தொழில்துறைகளை முற்றாக இழக்கவும் அல்லது பெரும் நிதி இழப்புக்களைச் சந்திப்பதற்குமே வாய்ப்புக்களை ஏற்படுத்தும். யதார்த்தம் இவ்வாறிருக்கையில், 'வடக்கு மீனவர்களைப் பாதிக்காத வகையில்' இந்திய மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளை எவ்வாறு அனுமதிப்பது என்ற தெளிவுபடுத்தலை இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டும்.

இந்திய மீனவர்களை வடக்குக் கடற்பரப்பில் அனுமதிப்பது என்ற பரிசீலனை மிகப்பெரும் இராஜதந்திர நடவடிக்கை என்பது குறைந்தபட்ச அரசியல் அறிவுள்ள எந்தவொரு நபராலும் புரிந்துகொள்ளக்கூடியதே. ஆனால், பிராந்திய நலன்களுக்காகவும் வல்லரசுகளைப் பகைக்காதிருக்க வேண்டும்என்பதற்காகவும் இதுபோன்ற 'கொளுத்திப்போடும் நரித்தன' நடவடிக்கைகளையும் நகர்வுகளையும் ரணில் அரசாங்கம் கைவிட வேண்டும். பொருளாதார மீட்சிக்கான ஏது நிலைகளைப் பற்றிச் சிந்திக்காமல் மீண்டும் மீண்டும் இவ்வாறான சகுனியாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதானது இலங்கையை ஒருபோதும் மீள முடியாத பின்னடைவுக்குள் தள்ளுமே அன்றி, இந்தக் குறைமட்டச் சிந்தனைகளால் இந்தியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

பேச்சுவாக்கில் ஒரு விடயத்தைக் கூறிவிட்டு, அதன்மூலம் மக்களின் அபிப்பிராயத்தை நாடி பிடித்துப் பார்ப்பதலிலும் ரணில் அரசாங்கம் கைதேர்ந்தது என்பதையும் இங்கு ஏற்றாகத்தான் வேண்டும். ஆதலால், வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை அனுமதிப்பது என்று வெளிப்படுத் தப்பட்டிருக்கும்கருத்துக்கும்அதன்மீதானபரிசீலனைகளுக்கும் ஓரணியில் நின்று மிகக்கடுமையானதும் கனதியானதுமான எதிர்ப்பை மக்கள் பிரதிநிதிகளும் பொது அமைப்புக்களும் வெளிப்படுத்தவேண்டும். அல்லாதுவிடின் வடக்குக் கடற்பரப்பும் வடக்கு மீனவர்களின் பொருளாதாரமும் வாழ்வாதாரமும் இந்திய றோலர்களின் அத்துமீறிய ஆக்கிரமிப்புக்களால் மொத்தமாக விழுங்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

நாளொரு நல்வார்த்தை

"தான் துன்பத்தில் கிடந்தாலும் மற் றவருக்குத் துன்பம் நினைக்காமல் வாழ்பவனே உயர்ந்த மனிதன்"

– புத்தர்




### கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து

# முற்றுகையிடப்பட்டது இலங்கைத் தூதரகம்

## மே17 அமைப்பினர் தமிழகத்தில் போராட்டம்

சென்னை, மார்ச் 1

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் அண்மையில் தாக்குதல் நடத்தியதாகச் சொல்லப்படும் நிலையில், சென்னையிலுள்ள இலங்கை துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டு மே17 அமைப்பினரால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழக மீனவர்கள் ஆறு பேர் மீது எல் லைதாண்டி மீன்பிடித்த குற்றத்துக்காக இலங்கைக் கடற்படை மிலேச்சத்தனமான தாக்குதலை அண்மையில் மேற்கொண்டது என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின் றனர். பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் ஆறு மீனவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையிலேயே, திருமுருகன் காந்தி தலைமையில் 'மே17' அமைப்பினர் இந்தியா வுக்கான இலங்கைத் தூதரகத்தை முற்றுகை யிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக மீனவர்களைத் தொடர்ந்தும் தாக்கும் இலங்கைக் கடற்படையைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய இலங்கைக் கடற்படையுடனும், இலங்கை இராணுவத்துட னும் கொண்டுள்ள ஒப்பந்தங்களில் இருந்து இந்தியா வெளியேறவேண்டும் என்றும் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தி னர். (ம-இ)

### ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம்

# வழக்கில் மேலும் சிலரை இணைப்பதற்குத் திட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 1

ஜனாதிபதிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் முன்னின்று செயற்பட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட வேலன் சுவாமிகள் உள்ளிட்டோரின் வழக்கை மே மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம்.

இந்த வழக்கில் மேலும் சிலரை இணைக்க வுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்தே வழக்கு மே வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

தேசிய பொங்கல் விழாவில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக் கிரசிங்கவுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்களுக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன் றில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்க ளின் உறவினர் சங்கச் செயலாளர், பல்க லைக்கழக மாணவர் ஆகியோர் முன்னிலை யாகியிருந்தனர்.

இந்த நிலையில் மேலும் சில சந்தேகநபர் களை வழக்கில் இணைக்கவுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். அதனையடுத்தே வழக்கை மே மாதம் 8 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

(ம-14.20)

நாளை

02.03.2023

வியாழக்கிழமை

மாசி 18

சுபநேரம் : 07.57 - 09.27

ராகுகாலம் : 01.57 - 03.27

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அவசியமானவற்றுக்கே தற்போது நிதி ஒதுக்கீடு

## ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 1
மார்ச் மாதத்துக்குள் சர்வதேச நாணயநிதியத்திடம் இருந்து பணம் கிடைக்காவிட்டால், நாட்டின் அத்தியாவசிய செலவுகளுக்காக கையிருப்பு வைத்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்காலிக கொடுப்பனவுகளைச் செலுத்தமுடியாத நிலையில் எதிர்வரும் தேர்தலுக்கான செலவுகளுக்குச் சரியான வரவு - செலவுத் திட்டத்தை வழங்கவேண்டும் என்று நிதியமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறோம். எங்கள் செலவினங்களைக் கவனமாகத் திட்டமிடவேண்டும். ஆண்டு முழுவதும் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. தற்காலிக அடிப்படையில் நிதியை விடுவிக்க முடியாது. எதிர்பார்த்தபடி மார்ச் மாதத்தில் சர்வதேச நாணயநிதியத்தின் உதவி கிடைக்காத பட்சத்தில் நாம் இருப்பு வைத்திருக்க வேண்டும்.

தேர்தல் செலவு தொடர்பாக எங்களுக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழு 10 பில்லியன் ரூபா என மதிப்பிட்டது. ஆனால் 6 பில்லியன் ரூபா கேட்டது. எங்களால் தற்காலிகமாக பணம் செலுத்தமுடியாது. அவற்றை ஆய்வு செய்து சரியான வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்க நிதி அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளேன். எங்களிடம் தேவையான அனைத்துப் பணமும் இல்லை.

முன்னுரிமைகளுக்கு பணம் கொடுக்கப்பட வேண்டும். 2.8 மில்லியன் குடும்பங்களுக்கு அரிசி விநியோகம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் திவால் நிலையை எதிர்கொள்ளும் சிறு தொழில்களுக்கு நிவாரணம் வழங்க 20 பில்லியன் ஒதுக்கியுள்ளோம். இந்தக் கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்த வேண்டுமானால் நாடாளுமன்றம் எனக்குத் தெரிவிக்கலாம்.

பொருளாதாரம் எனது முன்னுரிமை. பொருளாதாரம் மேம்படாவிட்டால் நமக்கு நாடு இருக்காது. நாம் கவனம் செலுத்தவேண்டிய பிரச்சினை ஒன்று உள்ளது.

நாட்டை இழந்து அரசமைப்பை வைத்துக் கொள்ளலாமா? நாட்டைப் பாதுகாத்தால் தான் அரசமைப்பைப் பாதுகாக்க முடியும் - என்றுள்ளது. (எ-இ)

# வவு. எரிபொருள் நிலையங்கள் இரவு நேரத்தில் இயங்குவதில்லை

## பயணிகள் அசௌகரியம்

வவுனியா நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இரவு நேரத்தில் மூடப்படுவதால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

பல்வேறு மாவட்டங்களின் நுழைவாயிலாக வவுனியா நகரம் காணப்படுவதால் பலரும் தமது வாகனங்களுக்கு வவுனியாவில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பயணிக்கின்றனர்.

எனினும் நகரப்பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இரவு 7 மணியுடன் மூடப்பட்டு மறுநாள் காலை 8 மணிக்கே திறக்கப்படுகின்றன. இதனால் தூரஇடங்களில் இருந்து வரும் பயணிகள் மற்றும் அவசர தேவையின் பொருட்டு பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

24 மணி நேர சேவை என விளம்பரப்படுத்தப்பட்டு கியூ.ஆர் முறையில் எரிபொருளை வழங்கி வரும் நிலையில் இரவு நேரத்தில் நிலையத்தை மூடுவது தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இரவு நேரத்தில் நிலையம் மூடுவதற்கு முன்னர் எரிபொருள் பெறச்சென்றாலும் எரிபொருள் முடிவடைந்துவிட்டது என சில ஊழியர்கள் தெரிவிக்கின்றனர் எனவும் பயணிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஓ-14-110)

# பெப்ரவரி மாதத்துக்கான கொடுப்பனவு தரவில்லை

## முதியோர்கள் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
முதியோர்களுக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவு மாதம் நிறைவடையும் நிலையில் இன்னமும் வழங்கப்படவில்லை என தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த முதியோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முதியோர் கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்படுகிறது. இன்னமும் அந்தக் கொடுப்பனவு கையளிக்கப்படவில்லை. இக்கொடுப்பனவு முன்பதாக பிரதேச சமூக சேவைகள் அலகால் அந்தந்த அஞ்சல் அலுவலகத்தினூடாக வழங்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்கான கொடுப்பனவு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. அதுகுறித்து முதியோர் தேசிய செயலகத்துக்கு முறையிடப்பட்டதையடுத்து கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் அஞ்சல் அலுவலங்களில் வழங்கப்பட்டன.

பெப்ரவரி மாதக் கொடுப்பனவு மீளவும் சமுர்த்தி வங்கிகளிலேயே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து இன்னமும் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இதனால் தினமும் சமுர்த்தி அலுவலகங்களுக்கு அலைய நேரிடுகிறது.

இதுதொடர்பில் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

முதியோருக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவுக்குரிய கட்டுநிதி இன்னமும் வந்து சேரவில்லை. கட்டுநிதி கிடைத்ததும் கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-9)

# 13 ஐ மறுக்கும் தமிழ்க் காங்கிரஸ் மாகாணத் தேர்தலில் போட்டியிடுமா?

## செல்வம் அடைக்கலநாதன் கஜேந்திரகுமாரிடம் கேள்வி

வவுனியா, மார்ச் 1
13 ஆவது திருத்தத்தை மறுத்து மாகாண சபை முறைமையை எதிர்க்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவார்களா? அல்லது தேர்தலை புறக்கணிப்பார்களா? என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவற்கு பல்வேறு நொண்டிச் சாட்டுகளை கூறி தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார்.

தேர்தலை நடத்துவதில் நிதிப்பிரச்சினை இருப்பின் முன்னரே அறிவித்திருக்க வேண்டும். தேர்தலை நிறுத்துவது ஜனநாயக விரோதமானது.

உண்மையில் மாகாண சபைத் தேர்தலே முன்பதாக நடத்தப்பட்டிருக்க வேண்டும். எமது நிலங்களை பாதுகாப்பதற்கான அதிகாரம் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையில் இருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான தீர்வாக 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கூறும் அரசாங்கம் காணி பொலிஸ் அதிகாரங்களை பகிராது ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரங்களை வழங்குவதாக குறிப்பிடுகிறது. ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரத்தைப் பகிர்வது என்பது கேலிக்கூத்தானது.

தமிழ்த் தரப்பில் 13 ஆவது திருத்தத்தை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியும் எதிர்க்கின்றது. சமஷ்டியே வேண்டும் என்று கூறும் அவர்கள், அதனை பெறுவதற்கான எந்தச் செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை. வென்றெடுப்பதற்கான திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

அவர்களடம் கேட்கின்றேன் மாகாணசபை முறைமையை எதிர்க்கும் நீங்கள் மாகாணசபைத் தேர்தல் வந்தால் போட்டியிடுவீர்களா? அல்லது எதிர்த்து நிற்பீர்களா?. இதற்கு கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பதிலளிக்க வேண்டும்- என்றார். (ச-110)

# கசிப்புடன் இளைஞர் கோப்பாயில் கைது!

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தியில் கசிப்புடன் இளைஞர் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடைப்படையில் கோப்பாய் மத்தியிலுள்ள காணிப்பகுதிக்குள் இளைஞர் ஒருவர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட 19 வயதான இளைஞரிடமிருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து இளைஞரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-14-125)

# சிறப்புக் கலையரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 1
நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில், மாதாந்தம் நடைபெறும் சிறப்புக் கலையரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை இடம்பெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக் கலைகள் பீட விரிவுரையாளர் ப.சிவமைந்தனின் இசையரங்கு இடம்பெறவுள்ளது என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



“வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல்.” -வள்ளுவர்



நிலாந்தன்



# தாயின் துக்கம்:

## மதிசுதாவின் வெந்து தணிந்தது காடு

போரின் முதற் பலி உண்மை மட்டுமல்ல, பெண்ணுந்தான். தாயாக, மகளாக, மனைவியாக, அப்பம்மாவாக, அம்மம்மாவாக, இன்னபிறவாக போரில் முதலில் பலியாவது பெண்தான். போரில் ஆண்களுக்கு தண்டனை மரணம், காயம், அல்லது சித்திரவதை. ஆனால், பெண்களுக்கு மேலதிகமாக பாலியல் தண்டனையும் உண்டு. அவள் பெண் என்பதற்காக பாலியல் ரீதியாகவும் தண்டிக்கப்படுகிறாள்.

தாயாக அவள் போர்க்களத்தில் நிற்கும் பிள்ளைகளுக்காக விரதம் இருக்கிறாள். பசித்திருக்கிறாள்; விழித்திருக்கிறாள்; தாகமாய் இருக்கிறாள்; காயங்களோடே தனித்துமிருக்கிறாள். ஆயுத மோதல்கள் முடிந்த பின்னரும் அவள் காணாமற்போன தன் பிள்ளைகளுக்காக ஆண்டுக் கணக்காக தெருவோரங்களில் நிற்கிறாள்.

இவ்வாறாக போரில் தனித்துவிடப்படும் ஒரு தாயை மையப்பாத்திரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே மதிசுதாவின் 'வெந்து தணிந்தது காடு' என்ற திரைப்படம். ஒரு தாயின் நோக்கு நிலையிலிருந்து எடுக்கப்பட்ட படம் அது. ஒரு தாயாக, மாமியாக, அப்பம்மாவாக ஒரு முதிய பெண் எவ்வாறு போரைப் பிரதிபலிக்கிறாள் என்பதனை படம் சித்திரிக்கின்றது.

ஒரு தாயின் நோக்கு நிலையில் இருந்துதான் போர் பார்க்கப்படுகிறது. ஒரு தாயின் பயம், காயம், பரிதவிப்பு, நிராசை, அப்பாவித்தனம் போன்றவற்றுக்கூடாக போர் காட்டப்படுகிறது. ஒரு தற்காலிகக் குடியிருப்பில் அமைக்கப்பட்ட ஒரு மூடிய பதுங்குகுழியை மையமாகக் கொண்டு கதை பெருமளவுக்கு நகர்த்தப்படுகிறது. அந்த மையப்பாத்திரத்தின் ஒரு பேரன் போரில் நிற்கிறான். போர்க்களத்தில் நிற்கும் பிள்ளையின் தகப்பனான அவளுடைய மகன் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு எல்லையை நோக்கிப்போக முயற்சிக்கிறான். மற்றொரு மகன் படைத்தரப்பிடம் சரணடையப் போகிறான். இவ்வாறு இரண்டு பிள்ளைகளுக்கும் இடையே கிழிபடும் ஒரு தாயை மதிசுதா படமாக்கி இருக்கிறார்.

இறுதிக்கட்டப் போரில், ஒன்றில் பதுங்குகுழிகளை அல்லது பிணக்குழிகளை வெட்டிக் கொண்டிருந்த ஒரு மக்கள் கூட்டத்தைப் படம் பிரதிபலிக்கின்றது. எனினும், போர்க்களத்தில் நின்ற எல்லாத் தரப்புகளையும் படம் பிரதிபலிக்கிறது என்று சொல்லமுடியாது. எல்லாத் தரப்புகளினுடைய அரசியல் நியாயங்களையும் படம் பிரதிபலிக்கிறது என்றும் சொல்லமுடியாது. குறிப்பாக ஒரு சிறிய கூட்டுக் குடும்பத்தை அக்குடும்பத்தின் தலைவியாகக் காணப்படும் முதிய, காலில் காயமடைந்த, பெருத்த சரீரத்தைக் கொண்ட ஒரு தாயைச் சுற்றிப் படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தாய்மாரின் துக்கம், தனிமை, அப்பாவித்தனமான ஆசைகள் போன்ற எல்லாவற்றையும் படம் கொண்டுவருகிறது. தாய்மாரின் துக்கம் உலகளாவியது. தேற்றப்படவியலாத் தாய்மாரின் பிரார்த்தனைகளும் பரிதவிப்பும் உலகம் முழுவதிலும் ஒரே மாதிரியானவை. தேற்றப்படவியலாத்




தாய்மாரின் துக்கம் உலகின் எல்லா பதுங்குகுழிச் சுவர்களிலும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அடுப்படிக் கறுப்பில் அவர்களுடைய நிராசைகள் ஒட்டிக்கொண்டிருப்பதைப்போல.

மதிசுதாவின் மையப்பாத்திரமும் அப்படித்தான். இரண்டு பிள்ளைகளுக்கும் இடையே கிழிபடும் ஒரு தாய் அவர். மக்கள் படையில் இணைந்து பயிற்சி பெற்று பொறுப்பாளராகவும் இருந்திருக்கிறார். அதே சமயம் பேரக்குழந்தைகளை பதுங்குகுழிக்குள் வைத்து திருமணம் செய்து வைக்க ஆசைப்படும் ஒரு பேத்தியும் அவர். ஆனால் இறுதியிலும் இறுதியாக இரண்டு பிள்ளைகளும் தங்களுக்கு பாதுகாப்பானது என்று கருதும் திசைகளை நோக்கி இடம்பெயர, இந்த முதிய தாய் பதுங்குகுழிக்குள் சில காய்ந்த ரொட்டி களோடு தனித்துவிடப்படுகிறார்.

பைபிளில் கூறப்பட்டதுபோல பிள்ளைகளைப் பெற்றும் மலடி ஆகிறார். எனினும், அந்தக்குடும்பத்தோடு நெருங்கிப் பழகிய ஒரு மருத்துவப்போராளி தற்செயலாக அப்பதுங்குகுழிக்குள் வருகிறார். மிகுதிக் கதையை இதற்கு மேல் சொல்லாமல் விடுகிறேன். ரசிகர்கள் திரையில் பார்க்கட்டும்.

சமூகப் பங்களிப்போடு, கைபேசிக் கமராவால் எடுக்கப்பட்ட ஒரு படம் அது. கைபேசி கமராவுக்குள்ள அதியுச்ச சாத்தியக்கூறுகளை மதிசுதா குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறார். எனினும் சில இடங்களில் கமரா கண்ணுக்கு வேதனையாக இருக்கிறது.

மையப் பாத்திரம் நிதானமாக நடிக்கிறார். ஒரு பெருந்தேகியான பெண் அவர். காலில் காயப்பட்டிருக்கிறார். ஆனாலும் தலைமைத்துவப் பண்புமிக்கவர். ஒரு தாயாகவும் தலைவியாகவும் மனதில் பதிகிறார்.
உதிரிப்பூக்கள் மகேந்திரனை நான் முதன்முதலாகக் கண்டபோது உரையாடலின் போக்கில் அவர் சொன்னார் "நடிப்பு என்பது நடிக்காமல் இருப்பதுதான்" என்று. அந்தப் பெண் அதை செய்கிறார். படத்தின் முடிவில் அவர் பின்வருமாறு கூறுகிறார்...

**“ராசா என்ர பேரனிட்டை ஒண்டு சொல்லி விடுறியே...... வெற்றியோ தோல்வியோ இந்தச் சண்டையை இதோட முடிச்சிடச் சொல்லு...... போர் எண்டுறது பொல்லாதது”**

அது இறுதிக்கட்டப் போரில் பதுங்குகுழிக்குள் பிரார்த்தனைகளோடு தனித்து விடப்பட்ட அன்னையரில் ஒரு பகுதியினரின் குரலுந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.கனகேஸ்வரி
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# தாலத்தின் தாலாட்டு!

## மலையகத்தின் பார்வையிலிருந்து



ஓங்கி உயர்ந்த பனை மரத்தில் நிழல்கூட இல்லை என்பதால் அது பயனற்றது' என்று பாடசாலைக் காலத்தில் பிறர் சொல்லக் கேள்வியுற்ற நினைவு.

மலையகத்தில் பெரும்பாலானோருக்கு பனைமரம் என்றால் என்னவென்றே தெரியாது. அதன் நிழலை மட்டும் எப்படித் தெரியும்?. எங்களுக்கு பனை மரங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு வந்த பின்னர் தான். ஓங்கி வளர்ந்த பனை மரத்தில் பயனில்லை என்று பொய்யாகக் கற்பித்து விட்டார்களே! என்ற எண்ணம் தோன்றியதும் பனை மரங்களின் பயன்களை பார்த்த பின்புதான்.



பனை மரத்தைப் பார்த்தே வளர்ந்த யாழ்ப்பாணத்தவர்களுக்கு அல்லது வடக்கு - கிழக்கு உறவுகளுக்கு இது பெரிய விடயம் இல்லைதான். ஆனால், பனைமரம் எதுவென்று தேடிய மலையகத்தின் பார்வையில் இது பெரிய விடயமே. எத்தனை வியப்புகள் இந்தப் பனையில். ஆரம்ப காலத்தில் சவர்க்காரமாகக்கூட பனம்பழம் இருந்ததை கேட்டு ஆச்சரியமாக இருந்தது. இளநீரின் சுவையைவிட சுவையான நுங்கு. எல்லா இனிப்பு சுவையையும் மிஞ்சிவிடும் அளவுக்குப் பனம்பழத்தால் செய்யப்படும் பலகாரம் தற்போதிருக்கின்றது.

மாறிவிட்ட நவீனத்தில் பனைமட்டையிலான கிடுகு வேலிகளும், பனை ஓலை பொருள்களும், அவற்றின் அழகியல் தன்மையையும் யாழ்ப்பாணத்தின் தனித்துவமான அடையாளமாகவே மிளிர்கின்றன என்றால் அதில் இரண்டாம் கருத்தில்லை.



## "புலர்காலையின் வலி" சிறுகதை அறிமுகம்





வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், எழுத்தாளருமான இயல்வாணன் எழுதிய "புலர்காலையின் வலி" சிறுகதைத் தொகுப்பு கலாநிதி. சு.குணேஸ்வரன் தலைமையில் கரவெட்டி இமையாணன் கலைமகள் முன்பள்ளி மண்டபத்தில் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் குறித்த நூலை வெளியிட்டு வைக்க, தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (66)



யாழ்ப்பாணம் - கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர பெருமான் தேவஸ்தானத்தில் சிவராத்திரி புண்ணிய தினமான கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை மாவை "ப்ருந்த கான லயா" என்னும் இசைக்கல்லூரியின் ஸ்தாபகர் திருமதி கோகிலத்வனி விஜயராகவன் மாணவியும், திரு.திருமதி பிரபாகரன் கிரிஜா தம்பதிகளின் புதல்வியும், கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மாணவியுமாகிய செல்வி மைத்ரேயி பிரபாகரனின் வீணா கான அரங்கேற்றம் கோயில் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து இராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்களின் தலைமையில் திருமதி கோகிலத்வனி விஜயராகவன் அவர்களுக்கு கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக இவ் தேவஸ்தானத்தில் ஆற்றிவரும் இசைப்பணிக்காக கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீனகர்த்தா சிவாகமபானு சிவஸ்ரீ ந.குமாரசுவாமி குருக்களால் "கலாசூரி" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# வியக்க வைத்த ஓவியக் கண்காட்சி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்துடன் இணைந்து நடாத்திய ஓவியப் போட்டியில் ஆரம்பப்பிரிவில் சிவதர்சன் நர்த்தனா என்ற மாணவி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

'இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது பால்நிலைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்' என்னும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்துடன் இணைந்து இந்தக் கண்காட்சியை முன்னெடுத்தது. இதற்காக இலங்கை முழுவதும் உள்ள ஓவியர்களிடமிருந்து பொருளாதார நெருக்கடியின் போதான வன்முறைகள், உணவுப் பற்றாக்குறை, வறுமை, போக்குவரத்துச் சிரமங்கள், அதிகரித்த வேலையின்மை, கல்வி, ஆரோக்கியம், ஊட்டச்சத்து, பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவம், விவசாயம் மற்றும் வீட்டுத்தோட்டம், வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை மற்றும் உள்ளூர் நிர்வாகம் போன்ற உபதலைப்புக்களில் வரையப்பட்ட சுமார் ஆயிரத்து 925 ஓவியங்கள் சேகரிக்கப்பட்டு அந்த ஓவியங்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டன.

ஓவியப் போட்டியில் வெற்றிபெற்ற ஓவியங்களுக்கான பரிசில்கள் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்











# பின்நவீனத்துவ கலைஞன்

மிகச் சிறந்ததும் மிகச் சரியானதுமான ஒன்றைக் கண்டு பிடித்து அதை மட்டும் நிரூபித்து வைத்துக்கொண்டிருந்து ஏனைய எல்லாவற்றையும் நிராகரிக்கும் போக்குத்தான் நவீனத்துவமாகும். ஆனால், பின் நவீனத்துவமானது இவ் நவீனத்துவ சிந்தனையால் பெரும்பாலானவர்கள் ஒடுக் கப்படுகிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவதே ஆகும்.

இவ்வாறாக அனைத்தும் சமமாக மதிக்கப்படவேண்டும் என்ற சித்தாந்தத்தையே பின்நவீனத் துவம் உணர்த்துகின்றது.



இவ்வாறாக பின்நவீனத்துவ சிந்த னையால் ஈர்க்கப்பட்டு ஒடுக்கப்பட்ட விடயங்களை மிகத் துல்லியமாக தனக்கு கைவரப்பெற்ற ஊடகமான ஆற்றுகைக் கலை மற்றும் ஓவியம் சிற்பம் மூலம்தான் பிறந்த இலங்கை தேசம் முழுவதிலும் வெளிப்படுத் திய ஒருவரே கிருஷன் சிவஞானம். தொடர்ந்தும் இலங்கையில் தன் பின்நவீனத்துவ சிந்தனையால் தன் கருத்துக்களை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் தற்போது புலம்பெயர் அகதியாக பிரித்தானி யாவில் தஞ்சம் புகுந்து தன் கலைச் செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

2016ஆம் ஆண்டு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத் தில் சித்திரமும் வடிவமைப்பும் பாடத்தில் சிறப் புப் பட்டதாரியான இவர், பல்கலைக்கழக காலம் தொடக்கம் இன்று வரை இலங்கையில் மட்டுமல்லாது ஆசிய ஐரோப்பிய நாடுகளிலும் தனியாகவும் குழுவாகவும் திறந்த வெளிகளி லும் கண்காட்சி கூடங்களிலும் தனது படைப்பாக்கங்களை தனது பின்நவீனத்துவ சித்தாந்தம் மாறாத பாணியில் துல்லியமாக வெளிப்படுத்தி வருகின்றார்.

இவரால், இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் நிகழ்த்தப்பட்ட 'கிராமத்து தலையணை' எனும் தனிக்கலை கண்காட்சியும் 'திசைகள்' எனும் குழுக் கலைக் கண்காட்சியும் சிறப்பிடம் பெறுகின்றது.

இதுபோன்று சர்வதேச கலைஞர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்ற இலங்கையின் புகழ்பூத்த கலைக்கூடங் களூடாக பல்வேறு தலைப்புக்களில் உள்நாட்டு வெளி நாட்டுக் கலைஞர்களின் மத்தியில் பல்வேறு ஆற்றுகை களை அவர் முன்னெடுத்தார். இதன்மூலம், தான் சொல்ல வந்த கருத்தை இலகுவாகக் கொண்டு சென்றார்.

இக்கலைஞரால் பிரித்தானியாவின் லண்டன் மாநகரின் புகழ்மிக்க வில்லியம்சன் கலைக்கூடத்தில் சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு நிகழ்தப் பட்ட தனி ஆற்றுகை யானது இலங்கையின் சிறுபான்மையோருக்கு எதிரான ஒடுக்குமுறை களை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் முக மாக அமைந்திருந்தது டன் தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டத்தை முன் னிட்டு, அவரால் லண்டன் நகரில் இன்னுமொரு குழுக் கண்காட்சியும் நடத்தப்பட்டது.



இது அவர் தனது கலைத்து வத்தை கண்டும் கடந்தும் முன்னெ டுப்பதை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "பயங்கரவாதி" நாவல் உரையாடல்

ஈழத்துத் கவிஞரும் எழுத்தாளருமான தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் உரையாடல் நிகழ்வு சென்னையில் சென்னை டிஸ்கவரி புக் பேலஸ் அரங்கில் நடிகர் நாசர் தலைமையில் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அண்மையில் வெளியாகிய பயங்கரவாதி நாவலுக்கு உலக அளவில் வாசகர்கள் பெரும் வரவேற்பு அளித்துவருகின்றனர். கிளிநொச்சி யிலும் அண்மையில் இந்த நாவல் வெளி யிடப்பட்டது.

இந்த நிலையில் நாவலை வெளியிட்டுள்ள சென்னை டிஸ்கவரி புக் பேலஸ் ஏற்பாடு செய் துள்ள பயங்கரவாதி நாவல் உரையாடல் நிகழ் வில் இயக்குநரும் நடிகருமான நாசர் ஓவியரும் திரைக்கலை இயக்குநருமான மருது, கவிஞர் மண்குதிரை, எழுத்தாளர் தீபச்செல்வன் ஆகி யோர் நிகழ்வில் உரையாற்றினார்கள்.

### ஈழப் போராளிகளுடன் இருந்த கலை இலக்கிய உறவு

அங்கு உரையாற்றிய ஓவியர் மருது, ஈழப் போராளிகளுடன் இருந்த கலை இலக்கிய உறவு குறித்தும் தீபச்செல்வனின் நடுகல் நாவ லில் வரும் வெள்ளையன் என்ற அண்ணாவை தனது கைகளால் வரைந்த நிகழ்வையும் உணர்வு ததும்ப நினைவுகூர்ந்தார்.

ஈழ நிலத்தில் இறுதிப் போரில் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் செய்த அறவழிப் போராட் டத்தை நுணுக்கமாக பயங்கரவாதி நாவல் பதிவு செய்துள்ளதாகவும் ஆழமும் கனிவும் கொண்ட உரையை கவிஞர் மண்குதிரை நிகழ்த்தினார்.

### கண்ணீருடன் உணர்வுபூர்வமான தொகுப்புரை

பயங்கரவாதி நாவலின் முக்கியமான பக்கங் களை நிகழ்வில் படித்ததுடன் கண்ணீருடன் உணர்வுபூர்வமான தொகுப்பையும் உரையை யும் கவிஞரும் இயக்குநருமான கவிதா பாரதி வழங்கினார்.

நிகழ்வில் உரையாற்றிய கவிஞர் தமிழ்நதி பல்வேறு அச்சுறுத்தல்களைத் தாண்டி ஈழ மண்ணில் இருந்து இயங்கும் தீபச்செல்வ னின் மிக முக்கியமான நாவல் பயங்கரவாதி என்றும் போர் காலத்தில் யாழ்ப்பாணத்தின் நிலையை பயங்கரவாதி பதிவு செய்துள்ளது எனக் கூறினார்.

### இலங்கை இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட அச்சுறுத்தல்

நிகழ்வில் ஏற்புரை ஆற்றிய எழுத்தாளர் தீபச் செல்வன் இலங்கை இராணுவத்தால் நிகழ்த்தப் பட்ட அச்சுறுத்தல்களை நினைவுபடுத்தியதுடன் ஈழ மக்களின் ஈழப் போராளிகளின் கனவுகளுக் காக தொடர்ந்தும் எழுதுவேன் எழுத்தே எனது ஆயுதம் என்றும் பேசினார். உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க தீபச்செல்வனின் பேச்சால் அரங்கம் நெகிழ்ந்தது.

நாவல் குறித்த கேள்வி பதில் உரையாடல் இடம்பெற்றதுடன் டிஸ்கவரி புக் பேலஸ் பதிப்பா ளர் வேடியப்பனின் நன்றி உரையுடன் நிகழ்வு சிறப்பாக நிறைவுபெற்றது.




# மாறிவரும் உலக வல்லரசு ஒழுங்கில் ஈழத்தமிழர் நிலை

மருத்துவர் சி.யமுனாநந்தா

தற்போதைய சமூக அரசியல் சூழல் உலகளாவிய ரீதியிலேயே சிக்கலான அரசியல் அவசர நிலையாக உள்ளது. உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் உலகின் ஒருங்கிய போராகும். இதில் நேரடியாக உக்ரைன் மற்றும் ரஷ்யா ஈடுபட்டிருந்தாலும் அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யாவுக்கு எதிராகச் செயற்படும் தன்மை வெளிப்படையாகவே காணப்படுகின்றது.

> “இலங்கையில் அரசியல் பொருளாதார சீரின்மைக்கு ஒருங்கிய உலகப் போரே காரணமாகும்.”

பெரும் இராணுவ நடவடிக்கைகள் பொருளாதார ஒழுங்கில் தாக்கத்தைச் செலுத்தும். தற்போதைய போரில் ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யாவும் பொருளாதாரத்தை வெகுவாக இழப்பதால் அவற்றின் உலக வல்லாதிக்கம் செயலிழக்கும் தன்மை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் சீனா உலகில் மிகப்பெரும் பொருளாதார வல்லரசாக முதலிடத்துக்கு முன்னேறுகின்றது. இந்த நிலையில் உலக இராணுவ ஆதிக்கத்தை தக்கவைக்க ஐக்கிய அமெரிக்கா, இந்தியாவுடன் போட்டி போடும் சூழல் உருவாகி உள்ளது. அதாவது இந்தியாவின் வியாபகத்தினை மட்டுப்படுத்த இலங்கையைக் கையாள வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உள்ளது. இலங்கையின் அரசியல் பொருளாதாரப் போக்கு இதன் பிரதிபலிப்பாக உள்ளமை நன்கு புலனாகின்றது. இலங்கையில் அரசியல் பொருளாதார சீரின்மைக்கு ஒருங்கிய உலகப் போர் காரணமாகும். உதாரணமாக இலங்கைக்கு வரும் எண்ணெய்க் கப்பல்களின் வரிசை இலங்கை மக்களின் வாழ்க்கையை வரிசைப்படுத்துகின்றது.

தற்போதைய சூழலில் இராஜதந்திரப் பரிவர்த்தனைக்கான டொலர், மேற்கத்தைய நாடுகளிடம் குறைந்துவிட்டது. அதன் நெருக்கீடுகள் எம்மை மறைமுகமாகத் தாக்குகின்றது. இத்தகைய சூழலில் இந்திய அரசும், சீன அரசும் முதலில் தமது இலாபங்களை அடிப்படையாக வைத்தே பொருளாதார ஒத்துழைப்புக்களை வழங்கும். இந்தியாவின் பொருளாதார உதவிகள் தமிழ் மக்களையும், வட இலங்கை, மலையகம் என்பவற்றை நெருக்கமாக்கிவிடும். இதனைத் தவிர்ப்பதற்குத் திட்டமிட்டு சில அநாகரிகச் செயல்கள் நிகழ்த்தப்படலாம். அவற்றில் ஒன்றே அண்மையில் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம்.

### பொருளாதாரத்தில் தற்போது தமிழர்களுக்கு சுயவிடுதலை

தற்போதைய பொருளாதாரம் மந்தநிலையில் உற்பத்தித் திறன் குறைந்த நிலையில் அரச இயந்திரம் குற்றுயிராகவே உள்ளது. சுகாதாரம், மருத்துவவசதி குறைவடைந்துள்ளது. வேலைவாய்ப்புக்கள் அற்றநிலை காணப்படுகின்றது. தற்போதைய சூழலில் பணத்துக்குப் பெறுமதி இல்லாத தன்மை காணப்படுகின்றது. நீதியைவிட நிதியே அவசர தேவையாக உள்ளது. மதவாதம், இனவாதம், பெரும்பான்மைவாதம், சிறுபான்மைவாதம் என்பவற்றின் மூலம் அரசியல் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. ஓர் இனத்தின் விடுதலை என்பது வேறு, ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டம் என்பது வேறு என்பதை உணரும் சமூகச் சூழல் உருவாகி உள்ளது. தமிழர்கள் தமது வாழ்விடங்களில் பொருளாதாரத்தை நிலைநிறுத்தி வாழ்வதற்கான சுயவிடுதலை கிடைத்துள்ளது. தற்போதைய சூழலில் நாம் எமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

எமது அரசியல் செயற்பாடுகள் இந்தியாவுக்கு விரோதமாக அமைந்தால் மீண்டும் மீண்டும் மீட்சி அற்ற சமூகமாகவே பரிணமிப்போம். குறிப்பாக புலம்பெயர் சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் ஊடக நெறியாள்கையாளர்கள் மற்றும் இலங்கையில் உள்ள மேற்குலக சார்பு அரசியல் செயலாற்றுனர்கள் புதிய உலகின் வலுநிலைகள் குறித்து ஆராய்தல் அவசியம்.

மேற்குலகின் சார்பாக அரசியல் குழப்பங்கள், தொழிற் சங்கப் போராட்டங்கள், வன்முறைப் போராட்டங்கள், இனவாத முன்னெடுப்புக்கள், சமூக முரண்பாடுகள் என்பன ஏற்படுத்தப்பட்டால் ஏற்கனவே பாதிப்படைந்த மக்கள் மீளவும் கீழ்நிலைக்குத் தள்ளப்படுவர். நாம் தற்போதைய சூழ்நிலையில் இனரீதியான கலவரங்கள், மதரீதியான கலவரங்கள் ஏற்படாது கவனமாக இருத்தல்வேண்டும். இதனை எமது அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள் புரிந்துகொள்ளல் வேண்டும். மேலும் சிறந்த சமூக நலத்திட்டங்களை உருவாக்கல் வேண்டும்.

> “சுகாதாரம், மருத்துவவசதி குறைவடைந்துள்ளது. வேலைவாய்ப்புக்கள் அற்றநிலை காணப்படுகின்றது. தற்போதைய சூழலில் பணத்துக்குப் பெறுமதி இல்லாத தன்மை காணப்படுகின்றது. நீதியைவிட நிதியே அவசர தேவையாக உள்ளது.”

எமது அரசியலில் காணப்படும் கூட்டான அரசியற் சொற்பதங்கள் இனப்பிரச்சினை, தமிழீழம், விடுதலைப் புலிகள், பயங்கரவாதம், சமஷ்டி, '13'ஆம் திருத்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம், சிங்கள பௌத்தம், மகாநாயக்கர், இனவாதி, பிரபாகரன், வடக்கு - கிழக்கு என்றவாறாக அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய மாற்றமடையும் உலகவலு ஒழுங்கில் அரசியற் சொற்பதங்களின் சமூக விளைவு சிறுபான்மையில் பெரும்பான்மையினருக்கும், சிறுபான்மையில் சிறுபான்மையினருக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். எமது இளையோர் மத்தியில் நவீன சமூகவியல் சிந்தனைகள் தோன்றுவதற்கான காலம் இதுவாகும். உலகின் ஒருங்கிய போரை சிறுபான்மைச் சமூகம் தனது இருப்பைத் தக்கவைக்கக்கூடியதாக எதிர்கொள்ள வேண்டும்.



சேகர்

## எந்த தடையுமில்லை

ஆட்சி அதிகாரம் ஏதுமில்லை
அரண்மனை வாசமும் எனக்கு
இல்லை
ஆனால் நித்தம் உண்ணுகிற
உணவுக்கு பஞ்சமில்லை
தங்கும் தரைக்கு எந்த வாடகையுமில்லை
தங்க கிரீடம் சூட்டதான் வசதியில்லை
அதேநேரம் என் தேவதைக்கு
மலர்கிரீடம்
சூட்ட எனக்கு எந்த தடையுமில்லை



## தன்னை இழப்பதே நோன்பு

நோன்பு என்பது சடங்கல்ல. அது ஒரு சபதம். எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன் என்ற தீரம். தன்னை இழந்து பிறர் வாழ தூய்மையுடன் உழைப்பதும் நோன்புதான். தன் மழலைக்காக ஊன் உறக்கம் மறந்து உதிரத்தை ஊட்டி உயர்வைக் கொடுப்பது பெற்றோரின் நோன்பு. இனம், மொழி தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற நோக்கில் தடைகளை, எதிர்ப்பை, அச்சுறுத்தலை உடைத்து நீதிக்காக குரல்கொடுப்பது உண்மையான தலைமைத்துவ நோன்பாகும்.

நோன்பு என்பது வலிந்து எம்மேல் நாமே சுமத்திக் கொள்வதல்ல. தியாகம் கலந்த சுகமான இழப்புக்களை அனுபவிப்பதே ஆகும். தன்னைக்கடந்து தன்னையே மறந்து பிறர் வாழவேண்டுமென்ற அடங்காத் துடிப்பில் தன்னலத்தை அர்ப்பணிப்பதுதான் நோன்பு. எனவே தவக்காலம் மட்டும் நோன்புக் காலமல்ல.

நோன்பே எமது ஆயுள்காலமாகட்டும். சத்தமில்லாது சபதம் ஏற்று நித்தமும் நல்ல செயல்கள் ஆற்றுவதே நோன்புக்கான தூய இலக்கணமாகும். இந்த நோன்பு அக, புற தூய்மைக்கான ஒரு காரணியாக அமைந்தால் அதில் பிறப்பது மகிழ்ச்சியும் அமைதியும் மன நிறைவுமாகும்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்கொள்வனவுக்கு 100 மில்லியன் ரூபா

## முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 1

அரசாங்கத்தின் நெல்கொள்வனவுத் திட்டத்துக்கமைய முல்லைத்தீவு விவசாயிகளிடமிருந்து நெல்லைப் பெற்றுக்கொள்ள 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நெல் கொள்வனவு செய்யப்படுவதற்கான இடம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலரால் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது பல குடும்பங்களை வறுமைக்குள் தள்ளியுள்ளது. அத்துடன் நியாய விலையின்றி அடிமட்ட விலைக்கே இடைத்தரகர்களால் நெல் கொள்வனவு செய்யப்படுகிறது என விவசாயிகள்



கவலை வெளியிட்டுள்ளனர். இந்நிலையில் அரசால் முன்னெடுக்கப்படும் நெல்கொள்வனவுத் திட்டம் நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் கொள்வனவுத் திட்டத்துக்கு 100 மில்லியன் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருளாதாரம் நலிவுற்ற மக்களுக்கு அரிசியை இலவசமாக வழங்குவதே இதன் நோக்கம். நெல்கொள்வனவு பிரதேச செயலகத்தால் நேரடியாக முன்னெடுக்கப்படுவதோடு களஞ்சியப்படுத்தப்படவும் உள்ளது. இதற்கென பிரதேச செயலாளருக்கும் நடுத்தர மற்றும் சிறிய ஆலை உரிமையாளருக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஒப்பந்தத்துக்கமைய அரிசி ஆலை உரிமையாளர்களால் பொதிசெய்யப்படும் 10 கிலோ அரிசிப் பொதிகள் மாவட்டத்தில் பொருளாதாரம் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட பயனாளர்களுக்கு இலவசமாக அரசாங்கத்தால் இம்மாதம் வழங்கப்படவுள்ளது - என்றார். (ச-19)



முல்லைத்தீவு - வற்றாப்பளை நண்பர்கள் வட்டம் ஊடாக வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் இரண்டு மாணவிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (ய-13)



கோண்டாவில் சந்தி வர்த்தகர்களின் நிதிப் பங்களிப்பில் ஈழத்துச் சித்தர் குடைச் சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை நிகழ்வு யாழ். கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள குடைச் சுவாமிகளின் சமாதியில் கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ய-66)



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, விசுவமடு பிரதேசத்தில் விஷன்கெயார் நிறுவனத்தின் கணினி மூலமான கண்பரிசோதனையில் 223 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. வனிதா ஜெயகாந்தன் அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் இந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (ய-19)



யாழ்ப்பாணம் நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவை ஒழுங்கமைத்து வழங்கியமைக்காகவும், அண்மையில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 'சிவநெறிப் பிரகாசர்' விருதினைப் பெற்றமைக்காகவும் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்துக்கு 'பிரசங்க மரபுக் காவலர்' என்னும் விருது ஆலய பிரதமகுருக்கள், ஆலயப் பரிபாலன சபையினர், சைவப்புலவர்களால் அண்மையில் வழங்கப்பட்டது. (ய)



திருகோணமலை செல்வநாயகபுரம் உதயபுரி கிராமத்தில் அமைந்துள்ள முத்துக்குமாரசுவாமி அறநெறிப் பாடசாலைக் கட்டடப் பணிக்காக, சந்நிதியான் ஆச்சிரமத்தால் 3ஆம் கட்டமாக 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. அத்துடன் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மூவருக்கு, 30 ஆயிரம் ரூபாவும் மாணவர்களின் சத்துணவுக்காக 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. மேலும் மூதூர் வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்துக்கு, சரஸ்வதி ஆலயம் அமைப்பதற்கான முதலாம் கட்ட நிதியுதவியாக ஒரு லட்சம் ரூபா பாடசாலை முதல்வரிடம் வழங்கப்பட்டது. (ம-14,20)

## மாணவனைக் காணவில்லை பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 1

பல்கலைக்கழக மாணவன் ஒருவரை கடந்த சனிக்கிழமை முதல் காணவில்லை என்று பெற்றோரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நீர்வேலி தெற்கு பூதர்மடம் பகுதியைச் சேர்ந்த மொரட்டுவ பல்கலைக்கழக மாணவனே காணாமற்போயுள்ளார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது. கடந்த சனிக்கிழமை வீட்டிலிருந்து யாழ்.நகருக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற நிலையில் மாணவன் காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## துப்பாக்கிச் சூட்டில் பிரபல வர்த்தகர் சாவு!

கொழும்பு, மார்ச் 1

பாணந்துறை பின்வத்த பகுதியில் காரில் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பிரபல வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்களை நடத்தும் சம்பத் குடாகொட (வயது-56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றுவிட்டு வீடு திரும்பிய வேளை, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை குற்றத்தடுப்புப் பிரிவு முன்னெடுத்து வருகின்றது. (ம-14.26)

## பப்பாசிச் செய்கை மோசமாகப் பாதிப்பு

### விலையும் சடுதியாக உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.குடாநாட்டில் பப்பாசிப் பயிர்ச்செய்கை பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளது எனப் பயிர்ச்செய்கையாளர்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

அநேகமான பப்பாசித் தோட்டங்களில் பப்பாசி மரங்களில் ஒருவித நோய் ஏற்பட்டு அவை பாதிப்புக்குள்ளாகின்றன. காலநிலை வேறுபாடு மற்றும் கடுமையான வெப்பம் உள்ளிட்ட காரணங்களால் இந்த நோய்த்தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் பப்பாசிப் பழங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் ஒரு கிலோ பப்பாசிப்பழம் 170 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 1

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி நாளை 2ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 24ஆவது அகவை நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
01.03.1999





ஆண்டவன் அடியில்
13.09.2021

## அமரர் டினோசிகா ஸ்ரீவாணன்

குறையில்லா பண்போடும் வரையறையில்லா
அன்போடும் கறையில்லா குணத்தோடும்
கரையில்லா கனவுகளோடும் நிறைவாக
நீர் வாழ்ந்த வாழ்வை அரை வழியில் காலனவன்
கவர்ந்துவிடவே அரனடியில் சரண்புகுந்தாயே.
டினோ ! நீர் சிந்திச்சென்ற சிரிப்பூக்கள் சிறப்புற
எம் சிந்தையுள்ளேயே சிதறிக்கிடக்கிறது
சிறப்பான உம் பிறந்தநாளில் சீர்பெற்று
நீர் வாழ்ந்த வாழ்வினை - எம் சிரம் மேலேற்றி
சிரம் தாழ்த்தி வணாங்குகிறோம் ! தினம் தினம்
பிறக்கட்டும் உம் பிறந்தநாள் தினந்தோறும்
உம் இறவாத நினைவுகளோடு சுவைக்கட்டும் எம் உலகம்!

சங்குவேலி மானிப்பாய்.
077 222 4186

(cs. 23736) (2.6)

என்றும் உம் நினைவுகளோடும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு • 02 • 08 • 1951



இறப்பு • 25 • 02 • 2023

## பொன்னுத்துரை கோபாலகிருஸ்ணன்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும். சுவிஸ் நாட்டில் வசித்து தற்பொழுது கலட்டி லேன். கோண்டாவில் மேற்கில் வசித்தவருமாகிய பொன்னுத்துரை கோபால கிருஸ்ணன் கடந்த (25.02.2023) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அருளம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும். காலஞ்சென்ற கனகராசா - இராசமணி ( ஜேர்மனி) தம்பதிகளின் அன்பு மருமகனும். இரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும். புஸ்பராணி (கனடா). பரமேஸ்வரன். செல்வராணி (கனடா). யோகராணி. இந்திராணி (கனடா). விஜயராணி (கனடா). புஷ்பநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும். காலஞ்சென்ற குணசேகரம் (கனடா). இராஜேஸ்வரி. ஜோர்ஸ் (கனடா). சண்முகலிங்கம். யோகரட்ணம் (கனடா). தாசன் ( கனடா). அன்னலச்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும். சுதாகரன் (சுவிஸ்). கிருபாகரன் (சுவிஸ்). காலஞ்சென்ற ரவீந்திரா (சுவிஸ்). கோமதி (சுவிஸ்). நிரஞ்சனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும். வனஜா (சுவிஸ்). கோமளா (சுவிஸ்). பிரதீபன் (சுவிஸ்). அருள்சோதி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும். சுவிஸில் வசிக்கும் ஆகாஸ். அக்ஷயா. அஸ்வின். சயான். சயானி. அபினாஷ். கீர்த்திகா. தனுஷா. தீபினா. அக்ஷயா. ஆருயா. ஆரணி. டென்மார்க்கில் வசிக்கும் சபீனா. ஜேசன் ஆகியோரின் அன்புப் பேரனும். தவராசா (ஜேர்மனி). சுவேந்திரராசா (சுவிஸ்). நிர்மலாதேவி (ஜேர்மனி). விஜயமணி (ஜேர்மனி). காலஞ்சென்ற ஆனந்தராசா (ஜேர்மனி). செல்வராசா (சுவிஸ்). காலஞ்சென்ற நித்தியராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (02.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(CS 23762)4.6

தகவல்:
குடும்பத்தினர்

077 398 5521

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை
# பகிரங்க ஏல அறிவித்தல்

எமது சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள். கணினி சாதனப்பொருட்கள். வாகன ரயர்கள். வெட்டி நிமிர்த்தப்பட்ட தார் பரல் தகரங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விடப்பட உள்ளது.

காலம் : 2023.03.14 (செவ்வாய்க்கிழமை)
நேரம் : மு.ப 10.30
இடம் : தலைமை அலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்ககூடிய ரூ.1000.00 தொகையினை தலைமை அலுவலகம். வலிகாமம் வடக்கு பிரதேச சபை. கொல்லங்கலட்டியில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். சித்தி பெறும் கேள்விதாரர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும். குறித்த ஏலத்திற்கு விடப்படும் பொருட்களை சபையின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். மேலதிக தகவல்களுக்கு 0212241130

சோமசுந்தரம் சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை

01.03.2023

(CR 39345)(3/6)

# வவுனியா வடக்கு பிரதேச சபை,நெடுங்கேணி
# கேள்வி அறிவித்தல்

**வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கடைத்தொகுதிகளை ஒரே கொடுப்பனவு ((Key Money) அடிப்படையில் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன**

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | கடை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்கேணி கடைத்தொகுதி கடை இல 1 | 2,000.00 | 10,000.00 | 15,00,000.00 |
| 2 | நெடுங்கேணி கடைத்தொகுதி கடை இல 2 | 2,000.00 | 10,000.00 | 15,00,000.00 |
| 3 | நெடுங்கேணி கடைத்தொகுதி கடை இல 3 | 2,000.00 | 10,000.00 | 15,00,000.00 |
| 4 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல 1 | 2,000.00 | 10,000.00 | 10,80,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 2023.03.01 - 2023.03.15 பிற்பகல் 1.30 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் - 2023.03.15 பிற்பகல் 02.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் - 2023.03.15 பிற்பகல் 02.05 மணி

**கேள்வி நியந்தனைகள்**

01. வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.
02. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம். தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதி. கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர். வவுனியா வடக்கு பிரதேசசபை. நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 15.03.2023 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தவறுனராக அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை 2023.03.31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
06. நெடுங்கேணி கடைகளுக்கான மாத வாடகையாக 6000.00 ரூபாவும். கனகராயன்குளம் கடைகளுக்கான மாதவாடகையாக 4500.00 ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும். எனினும் வாடகைத் தொகை காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும்.
07. கேள்வி நியந்தனைகள். அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ. நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
08. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
11. குறித்த கடைகளில் வாகன திருத்தகம். இரும்பு ஒட்டு தொழிலகம். வெடி மருந்து உற்பத்திகள் விற் பனை. நாவிதன் கடை. சலவைத்தொழில் போன்ற கடைகள் நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.
12. ஒவ்வோர் கடைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ஒரே விண்ணப்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கான கேள்வி கோரப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2030200 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்

தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
28.02.2023

(cr 39347)(2.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மெய்வன்மைப் போட்டி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி முதல்வர் தி.வரதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக கோஸ்வே பெயின்ற் லங்கா பிறைவேற் லிமிட்டற் பொது முகாமையாளர் வை.கிரிதரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-இ)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 06.02.1956 மறைவு 23.02.2023

யா/ பாசையூர் சென் அன்ரனீஸ். றோ.க. மகளீர் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் **திருமதி மெல்போன் லெசியா லக்ஷினி** அவர்களின் அன்புத் தாயார்

**மரியதாஸ் லூர்துநாயகி**

அவர்கள் கடந்த (23.02.2023) வியாழக்கிழமை இறைபதமெய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க. மகளீர் வித்தியாலயம்.**

(CS/23765)4.6

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

**Refurbishment of Building as Library of Tamilology at University of Jaffna**

**Bid No : YA/CWP/KKTF/C1/2023/01**

**Amendment to eligible CIDA Grades**

With reference to the above procurement published on 24.02.2023 in Thinakkural, Uthayan and 25.02.2023 in Veerakerari for Refurbishment of Building as Library of Tamilology at University of Jaffna. The CIDA Grades of C7, C6 and C5 are eligible for the above procurement, having considered the circular No. PFD/PMD/-Cir/Reg.contracts published by Ministry of Finance, Economic Stabilization and National Policies dated 09.02.2023.

All the other terms and conditions given in the previous advertisement remain unchanged.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**

**28/02/2023**

(CR 39344)(3/6)

## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 05 - 1948



உதிர்வு 27 - 02 - 2023

### திருமதி தயாலேஸ்வரி ஜெயசீலன்

குரு வீதி, காங்கேசன்துறையைச் சேர்ந்த தயாலேஸ்வரி ஜெயசீலன் அவர்கள் நேற்று முன்தினம் (27.02.2023) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் ஜெயசீலனின் ஆருயிர் மனைவியும், நிரோஷ் (அவுஸ்ரேலியா), நிவேதிதா (பொட்ஸ்வானா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரிவரன்,லோஜிதா ஆகியோரின் மாமியாரும், அனன்யா, சிவகீர்த், சயந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவபாலன், சிவகுமாரன், கருனேஸ்வரி, காலஞ்சென்ற சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கயிலைவாசன், காலஞ்சென்ற புஸ்பாவதி, தில்லைஈசன், மல்லிகாவதி, செல்வநேசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (02.03.2023) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் பிற்பகல் 5.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**நா.ஜெயசீலன் (கணவர்) : 077 899 4123**
**நிரோஷ் (மகன்), நிவேதிதா (மகள்)**

(CS 23768 ) (3/6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 02.08.1953 இறப்பு 26.02.2023

### நவரத்தினராசா தவலட்சுமி

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினராசா தவலட்சுமி கடந்த (26.02.2023) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - பாக்கியம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவரான நவரத்தினராசாவின் அன்பு மனைவியும், கனகராசசிங்கம், சின்னத்துரை, தவராசலிங்கம் (உரிமையாளர், நந்தினி பேக்கறி), ஞானலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருமலிங்கம், இராஜேஸ்வரி, துரைராசா, இராசதுரை, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும், நாகதீசன் (ஜேர்மனி), நாகரூபன் (கனடா), நாகரஞ்சினி (லண்டன்), நாகமனோகரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரியா, வதனி, தவேந்திரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தீஷா, அபிஷான், லாவண்யா, லஷ்ஷண்யா, துர்கேஷ், காயினி, கஜான், கிஷானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தகவல் : சகோதரன்**
**செல்வம் (உரிமையாளர், நந்தினி பேக்கறி)**

(CS 23764) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலால் வலைகள் நாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

சுழிபுரம் - காட்டுப்புலம் மீனவர்களின் ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள், இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறலால் நேற்றுமுன்தினம் இரவு அறுத்தெறியப் பட்டுள்ளன.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பாதிக்கப்பட்ட சதாசிவம் சிறிகாந்தன் என்ற மீனவர் கருத்துத் தெரிவிக் கையில்;

நாங்கள் நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) கடலுக்குச் சென்றோம். வலையை கடலில் வீசி விட்டு இருந்தவேளை சுமார் 300 இந்திய இழுவைப் படகுகள் எங்களது கடல் எல்லைக்குள் வெளிச்சம் பாய்ச்சாமல் உள்நுழைந்தன. இழுவைப்படகில் வந்த இந்தியமீனவர்கள் நாம் வீசியிருந்த வலைகளை வெட்டி நாசம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தற்போதுதான் மீன்பிடி பருவகாலம். வலைகளை கடன் பெற்றே நான் வாங்கினேன். அந்த வலைகளைக் கொண்டு இரண்டு தடவைகள் மட்டுமே மீன்பிடித்த நிலையில் மூன்றாவது தடவை மீன் பிடிப்பதற்காகச் சென்றபோதே இவ்வாறு நேர்ந்துள்ளது - என்றார். (அ-ஒ.இ)

# இத்தாலியில் படகு விபத்து; உயிரிழப்பு 61 ஆக உயர்வு!



உரோம், மார்ச் 1

200 க்கும் மேற்பட்ட புலம்பெயரிகளை ஏற்றிச் சென்ற படகு இத்தாலி கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதில் இதுவரை 61 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

நிலநடுக்கத்தால் பேரழிவைச் சந்தித்துள்ள துருக்கி நாட்டில் வசித்து வந்த பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சோமாலியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட அகதிகளை ஏற்றிச் சென்ற படகே கடல்சீற்றம் காரணமாக பாறைகளுடன் மோதி விபத்துக்குள் ளாகியுள்ளது.

படகு உடைந்து கடலில் மூழ்கிய நிலையில் படகிலிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் மூழ்கினர். அவர்களில் சிலர் நீந்திக் கரைசேர்ந்துள்ளனர்.

விபத்துக் குறித்த தகவலறிந்த இத்தாலி கடலோர மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இதுவரை 61 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்னமும் 30 பேர் மாயமாகியுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ஜொ.ஆ.ம.அமரசேகரம் அவர்களின்
அன்புத் தாயார்

**யுவானிஸ் அன்னம்மா**

அவர்கள் கடந்த (04.02.2023) சனிக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (CS 49343) (3/6)

ஆசிரியர் வட்டம்
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## மரண அறிவித்தல்

தோற்றம் 20.10.1938 — மறைவு 28.02.2023

**செல்வி செல்வதேவி செல்வதுரை**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், சித்தாவத்தை, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி செல்வதேவி செல்வதுரை (ஓய்வு பெற்ற ஆசிரியை) நேற்று (28.02.2023) செவ்வாய்க்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு செல்வதுரை (ஐயக்கோன், சட்டத்தரணி), காலஞ்சென்ற தவமணி செல்வதுரை (பாப்பா) ஆகியோரின் மூத்த மகளும், செல்வலட்சுமி பத்மநாதன் (பட்டு, ஓய்வுபெற்ற ஆசிரியை, ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வகுமார் (தம்பர், சித்தாவத்தை, உடுவில்), காலஞ்சென்ற தவக்குமார் (அண்ணையன், உடுவில், Bank of Ceylon), காலஞ்சென்ற சந்திரக்குமார் (சந்திரன், உடுவில்), காலஞ்சென்ற ஆனந்தக்குமார் (ஜெயம், பிரான்ஸ்), காலஞ்சென்ற இரத்தினக்குமார் (ஆனந்தி, ஜேர்மனி) மற்றும் வசந்தக்குமார் (வசந்தி, ஜேர்மனி), திருமதி செல்வரஞ்சினி தர்மலிங்கம் (தங்கச்சி, கனடா), விஜயகுமார் (குட்டி, ஜேர்மனி), திருமதி செல்வராணி குகதாஸ் (கொங்கா, கனடா), நந்தக்குமார் (நந்தன், CTB, நெதர்லாந்து) ஆகியோரின் மூத்த சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2023) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சித்தாவத்தை வீட்டிலிருந்து உடுவில் மக்களின் சைவச் சுடலையான பூவோடைக்கு (இணுவில் ரயில் நிலையத்தடி) தகனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
சித்தாவத்தை, உடுவில். திருமதி சண்முகா செல்வகுமார்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 • 11 • 1942 — மறைவு 25 • 02 • 2023



**நாகலிங்கம் சிவதாசன் (சிவம்)**

வர்ணணை பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவதாசன் கடந்த (25.02.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ் நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், அமரர் சிதம்பரநாதன், அமரர் சிவஞானம், சிவகாமி, அமரர் சுப்ரமணியம், அமரர் வைகுந்தநாதன், சிவனேசன், அமரர் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சபேசன் (கனடா), சதீசன் (லண்டன்), சுபாசினி, பவோயினி (லண்டன்), நிசாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனலாஜினி, தனுஷா, (அமரர்) பரஞ்சோதி, சிவானந்தம், றஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுலக்ஷிகா, சனோஜன், யஸ்மிதா, அஸ்வின், சதுஷன், கஸ்தூரி, சுலக்ஷன், டக்சனா, றஜிதா, ஜெயதரன், வசீதரன், லைஷன், டிலுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9659 392

(CR 39350) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 • 07 • 1949 — மறைவு 26 • 02 • 2023



**நடராசா மகேந்திரராசா**

நல்லூர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் நல்லூர் மற்றும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மகேந்திரராசா கடந்த (26.02.2023) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா விசாலாட்சி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அரியநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், மயூரன், அருணன் (பிரான்ஸ்) கஜாழினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், தனபாலரெட்ணம், இரத்தினராஜா மற்றும் இந்திராதேவி (நீர்கொழும்பு) ஆனந்தராசா, சிவானந்தராசா (பிரான்ஸ்) லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சரஸ்வதி, மற்றும் அருணா, அமுதவல்லி (கனடா), காலஞ்சென்ற கிருஷ்ண தயானந்தம் மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சுபாசினி (லண்டன்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் விஜயராணி, தர்மானந்தன், உதயகுமார், இந்திராணி, ஜெயந்தி, ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் வளர்மதி, அகிலா (பிரான்ஸ்) பகிரதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷேக், அக்ஷரா, அஜன், அவினா, அனெல்யா (பிரான்ஸ்) அக்ஷியன், சாருயா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

261/7, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
076 8310 462 - அருணன்
077 0186 699 - மயூரன்

(CR 39349) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிவடைகிறது பணவீக்கம்

கொழும்பு, மார்ச் 1
தேசிய நுகர்வோர் விலைக் சுட்டெண்ணின் அடிப்படையில் நாட்டின் வருடாந்த பணவீக்கம் பெப்ரவரி மாதத்தில் 50.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. நாட்டின் வருடாந்த பணவீக்கம் கடந்த ஜனவரியில் 54.2 சதவீதமாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(அ-ஒ,இ)

## இன்று...

துறைமுகம், விமான நிலையம், நீர் வழங்கல், இலங்கைப் பெற்றோலியம், சிறிலங்கா ரெலிகொம், இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் உட்பட 30க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் குறித்த நிர்வாக முடக்கல் போராட்டத்தில் இறங்கவுள்ளன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடாவிட்டாலும் மேற்படி தொழிற்சங்க நடவடிக்கைக்கு முழு ஆதரவை வழங்குவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், அதிபர் - ஆசிரியர் கூட்டணி, தபால் ஊழியர்கள் சங்கம், புகையிரத சேவையாளர்கள் சங்கம், அரச ஊழியர்கள் சங்கம் உட்பட மேலும் பல அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

இதன்படி நாட்டில் 12 மாவட்டங்களில் போராட்டத்தை நடத்துவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. புகையிரத ஊழியர்கள் சங்கம், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நண்பகல் 12 மணிக்கு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

கறுப்புப் பட்டி அணிந்து கடமைகளில் ஈடுபட இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

அதிபர், ஆசிரியர் கூட்டணியினரும் பாடசாலைகளுக்கு முன்பாக கறுப்புக் கொடி ஏற்றி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளனர். இன்றையதினம் கறுப்பு ஆடை அணிந்து அல்லது கறுப்புப் பட்டி கட்டி பாடசாலைக்கு வருமாறு அதிபர், ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வரிக்கொள்கையை மீளப் பெறுதலுக்கு அப்பால், சம்பள உயர்வு, ஜனநாயக உரிமைகள், அரச அடக்குமுறை நிறுத்தம் என்பன பற்றியும் இன்றைய போராட்டத்தில் வலியுறுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதிக்குள் அரச தரப்பில் இருந்து சாதகமான பதில் இல்லையேல், தொடர் போராட்டத்தை முன்னெடுக்கும் எச்சரிக்கையையும் தொழிற்சங்கங்கள் விடுத்துள்ளன. (அ-ஒ,44)

## மாநகரசபை...

சபை கலையாது என்றும் புதிய முதல்வர் தெரிவே இடம்பெறும் எனவும் துறைசார் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சாதாரணமாக இரு தடவைகள் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் முதல்வர் பதவியிழப்பதுடன் புதிய முதல்வரின் கீழும் இரு தடவைகள் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் சபை கலையும் என்பதே சட்ட ஏற்பாடு என்றபோதிலும், அது சபையில் ஏதாவது ஒரு கட்சி அல்லது சுயேச்சைக்குழு சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு அதிகமாக இருந்தால் மாத்திரமே பொருந்தும் என்றும் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இந்த விடயத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் கடந்த தடவை அரச சட்டவாதிகூட சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு அமைவாக உள்ளூராட்சி ஆணையாளரால் புதிய முதல்வர் தெரிவுக்கான திகதி வர்த்தமானி ஊடாக விரைவில் அறிவிக்கப்படும் என தெரியவருகின்றது. (அ-ஒ,5)

## வங்கிப்...

இன்றையதினம் தொழிற்சங்கப் போராட்டத்தில் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஊழியர் சங்கங்கள் இணைந்துள்ள நிலையில் அவர்கள் வழமை போன்று பணிக்கு வருவார்கள் என்று நம்புவதாக இரண்டு வங்கிகளினதும் தலைவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வங்கியின் தலைவர் சட்டத்தரணி ரொனால்ட் சி பெரேரா, இந்த நாடு இப்போது மிகவும் கடினமான பொருளாதார நிலையில் உள்ளது. இந்நிலையில் பல தொழிற்சங்கங்கள் இன்று வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளன. இலங்கை வங்கியின் தலைவர் என்ற வகையில், எமது ஊழியர்களை இன்று பணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் எமது வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை வங்கி சிறந்த சேவையை வழங்குகிறது. ஒரு நாள் கூட வங்கி மூடப்பட்டால், நாடு முழுவதும் பெரும் அசௌகரியம் ஏற்படும்.

மேலும், வரி வசூலிப்பு மற்றும் வரி விகிதங்களைக் குறைப்பது குறித்து அரசாங்கம் முடிவெடுக்கவேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. எனவே, இந்த விவகாரம் குறித்து அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளோம். இந்தப் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும் என நம்புகிறோம். வங்கி மற்றும் வங்கியின் வாடிக்கையாளர்கள் சார்பாக பணிக்கு வருமாறு எங்கள் ஊழியர்களைக் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச கருத்துத் தெரிவிக்கையில்; பல தொழிற்சங்கங்கள் இணைந்து வேலை நிறுத்தம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாக அறிகிறோம். மக்கள் வங்கி என்ற ரீதியில், மக்கள் வங்கியின் ஊழியர்கள் என்ற ரீதியில் மக்கள் வங்கி ஊழியர்களை முறையாக கடமைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு மக்கள் வங்கி பெரும் பங்களிப்பை வழங்குகிறது. நாங்கள் இந்நாட்டின் பொருளாதாரத்துக்கும், அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகிறோம். எனவேதான், வழமைபோல் பணியில் சேர்ந்து, சேவையைப் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த நேரத்தில், அரசாங்கத்துக்கோ நாட்டுக்கோ அல்லது பொருளாதாரத்துக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது - என்றார். (அ-ஒ,இ)

## வரி அதிகரித்தும்...

இந்த மாதம் வருமானத்துக்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி 23 பில்லியன் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு தேர்தலுக்கு நிதியை விடுவிப்பது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. தேர்தல்கள் ஆணைக்குழு நிதியை விடுவிக்கக் கோரி சபாநாயகருக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எம்மிடம் நிதி இருந்தால் அதனை வழங்குவதில் எவ்விதச் சிக்கலும் இல்லை. இந்த மாதம் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்கல், ஓய்வூதியம், சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்கல் உட்பட ஏனைய தேவைகளுக்காக 83 பில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

வரி அதிகரிக்கப்பட்டதன் பின்னரும் இந்த மாத வருமானத்துக்கும் செலவுக்கும் இடையில் 23 பில்லியன் ரூபா இடைவெளி காணப்படுகின்றது. இந்த மாதம் கடன் சேவைகளுக்காக 500 பில்லியன் ரூபா அவசியமாகும். அதற்கமைய இந்த மாதம் ஒட்டுமொத்தமாக 500 பில்லியன் ரூபாவுக்கும் அதிக பற்றாக்குறை ஏற்படும் என்று திறைசேரியால் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு கடன் பெறவும்முடியாது, பணத்தை அச்சிடவும் முடியாது. அவ்வாறிருக்கையில் முடியாதவொன்றை எவ்வாறு செய்யமுடியும்?

அதேவேளை அரச பணியாளர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்திக் கொடுப்பனவு மற்றும் அரச கடனுக்கான வட்டி என்பவற்றைச் செலுத்துவதை தவிர்க்கமுடியாது.

எனவேதான் தேர்தலுக்கான நிதியை வழங்குவது கடினம் என்று திறைசேரி செயலாளரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் முன்வைத்துள்ள காரணிகள் தவறென்றால் அதனை நீதிமன்றமே தீர்மானிக்கும்-என்றார்.
(அ-ஒ,இ)

## புதிதாக...

இந்த மாதம் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளதெனவும், இதன் போது புதிதாக 10 பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

உத்தேச அமைச்சரவைப் பட்டியலில் காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோகித்த அபேகுணவர்த்தன, எஸ்.எம்.சந்திரசேன, ஜனக பண்டார தென்னக்கோன், சரத் வீரசேகர ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன எனவும் அவர் கூறினார்.

தனக்குவழங்கப்படும்அமைச்சைவைத்து, சிறப்பாக செயற்படும் ஆளுமை தனக்கு உள்ளது எனவும் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டார். (ஒ,44)

## மீண்டும்...

இ.ஆர்னோல்ட் இழந்துள்ளார். வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் கிடைத்தன. இதனால் 6 மேலதிக வாக்குகளால் இ.ஆர்னோல்ட் முன்வைத்த வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் முதல்வராக 2018 ஆம் ஆண்டு இ.ஆர்னோல்ட் தெரிவுசெய்யப்பட்டார். அவரது வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டமையால் பதவி விலகியிருந்தார். இதன் பின்னர் புதிய முதல்வராக வி.மணிவண்ணன் தெரிவாகியிருந்தார். அவரது வரவு - செலவுத் திட்டம் கடந்த ஆண்டு தோற்கடிக்கப்பட்டது. அவர் இரண்டாவது முறை வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்காமல் பதவி விலகியிருந்தார். இதனையடுத்து நடத்தப்பட்ட முதல்வர் தெரிவில் இ.ஆர்னோல்ட் வென்றதாக சர்ச்சைக்குரிய வகையில் அறிவிக்கப்பட்டு, பதவியைப் பொறுப்பேற்றிருந்தார்.

அவர் இந்த மாதம் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தபோது 8 மேலதிக வாக்குகளால் அது தோல்வியடைந்திருந்தது. இந்த நிலையில் நேற்று இரண்டாவது தடவையாகவும் வரவு - செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 9 உறுப்பினர்கள், ரெலோவின் 2 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு உறுப்பினர், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்கள், ஈ.பி.டி.பி. யின் ஒரு உறுப்பினர் (தற்போது தமிழ் அரசுக் கட்சி சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றார்) என 16 பேர் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு அணிகளும் (மணிவண்ணன் அணி உட்பட) மற்றும் ஈ.பி.டி.பி. என்பனவற்றின் 22 உறுப்பினர்கள் இணைந்து வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

புளொட்டைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் நடுநிலை வகித்தார். ஏனைய 2 உறுப்பினர்கள் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை. ரெலோ உறுப்பினர் ஒருவரும் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

தான் முன்வைத்த பாதீடு இரண்டு தடவைகளும் தோற்கடிக்கப்பட்டதால், யாழ்.மாநகரசபையின் வரலாற்றில், ஒரு ஆட்சிக் காலத்தில் இரண்டாவது முறையாகவும் முதல்வர் பதவியை இழந்த முதல்நபராகவும் இ.ஆர்னோல்ட் மாறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5,20,26,66)

## தொழிற்சங்க...

நிவர்த்தி செய்யும் வகையில்தான் இன்று மீண்டும் வரியை விதித்துள்ளோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இன்றைய தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் கொழும்பு செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தொழிற்சங்கங்கள் உள்ளன. ஆனால், எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் சில தொழிற்சங்கங்கள் பலிக்கடாவாகியுள்ளன.

வங்குரோத்து அடைந்துள்ள எமது நாடு மெல்ல மெல்ல மீண்டெழுந்து வருகின்ற நிலையில் தொழிற்சங்க நடவடிக்கை எதற்கு என்று குறித்த தொழிற்சங்கங்களிடம் கேட்க விரும்புகின்றேன். ஒரு நாள் தொழிற்சங்க நடவடிக்கை மூலம் நீங்கள் சாதிக்கப்போவது என்ன?

அன்று வரியை நீக்கியமையால்தான் நாடு வங்குரோத்து அடைந்தது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில்தான் இன்று மீண்டும் வரியை விதித்துள்ளோம். மின் கட்டணத்தில் அதிகரிப்பை மேற்கொள்ளாமல் மின்விநியோகத்தைச் சீராக மேற்கொள்ளமுடியாது. தற்போதைய நிலைமையில்ஓரிருமாதங்களுக்குவிலைவாசி உயர்வு தவிர்க்கமுடியாதது. எல்லாவற்றுக்கும்சர்வதேசத்திடம்நாம்கையேந்தி நிற்கமுடியாது. நாம் மெல்ல மெல்ல சொந்தக் காலில் நிற்கப் பழகிக்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ஒ,5,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதானி குழுமத்தின்

# காற்றாலைத் திட்டம் பற்றி மக்களின் கருத்துக் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

இந்தியாவின் அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள மன்னார்- தம்பபன்னி காற்றுச் சக்தி செயற்றிட்டத்தின் முதலாம்கட்ட விரிவாக்கமாகக் கொள்ளளவை மேம்படுத்துவதற்கான திட்டம் முன்னெடுக்கப்படுவதால் இந்த உத்தேச செயற்றிட்டத்தால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக கருத்துக்களை மக்கள் வெளிப்படுத்தலாம் என கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர்.ஏ.எஸ்.ரணவிக்க தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு அமைச்சு, கரையோரம் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலர் அலுவலகம் திட்டமிடல் கிளை, பிரதேச செயலாளர் அலுவலகம், கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம் ஆகியவற்றில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தமது அபிப்பிராயங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(அ-ஒ,5,60)

காற்றாலைத் திட்டம்

# மக்கள் கோரிக்கைக்கு முதலில் தீர்வு காணுக!

சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

மன்னார்- பூநகரியில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மூலமான திட்டத்துக்கு பொதுமக்கள் வெளியிடும் எதிர்ப்புக்கான காரணங்களைக் கண்டறிந்து அதனைப் நிவர்த்தி செய்த பின்னரே அந்தத் திட்டத்தை செயற்படுத்தவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தியாவின் அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள மேற்படி செயற்றிட்டத்துக்கு பொது மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் எத்தகைய நடவடிக்கைகளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைக்கொள்ளப்போகின்றது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'மக்கள் சுற்றுச்சூழல் தொடர்பான கரிசனைகளை முன்வைத்துள்ளனர். அது தொடர்பில் கவனமெடுத்து அதனைத் தீர்த்து வைக்க வேண்டும். அதன் பின்னரே திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார். (அ-ஒ,5)

# உறைபனியில் அமெரிக்கா

அமெரிக்காவின் மேற்கு மாகாணமான கலிபோர்னியாவில் வீசிவரும் பயங்கர பனிப்புயல் அந்த மாகாணத்தையே புரட்டிப்போட்டுள்ளது என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக அந்த மாகாணத்தின் மிகப்பெரிய நகரான லொஸ் ஏஞ்சல்ஸ் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு மணிக்கு 112 கி.மீ. வேகத்தில் புயற்காற்று வீசுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதிகளெங்கும் பனித்துகள்கள் பல அடி உயரத்துக்கு குவிந்து கிடக்கின்றன எனவும் மழை காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சாலைகள் அனைத்தும் மூடப்பட்டு, போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியுள்ளது. அதேபோல் புகையிரத வழித்தடங்களிலும் பனித் துகள்கள் மலைபோல் குவிந்து கிடப்பதால் புகையிரத சேவைகளும் விமான சேவைகளும் ரத்துசெய்யப்பட்டுள்ளன. புயலின் போது ஏராளமான மின்கம்பங்கள் சரிந்து விழுந்ததால் லொஸ் ஏஞ்சல்ஸ் உப்பட பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் ஆயிரக் கணக்கான மக்கள் பரிதவித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)

# புதிய லோகோவுடன் 'நொக்கியா' மீளெழுச்சி

வொஷிங்டன், மார்ச் 1

60 ஆண்டு கால வரலாற்றில் முதல் முறையாக தனது அடையாளமான லோகோவை மாற்றி புதிய லோகோவை அறிமுகம் செய்துள்ளது நொக்கியா நிறுவனம்.

நொக்கியா உலகின் முன்னணி தொலைபேசி நிறுவனமாகும்.

தற்போது ஸ்மார்ட் தொலைபேசிகளின் வருகை அதிகரித்த நிலையில் சீனா, ஜப்பான் நிறுவனங்களுடன் போட்டி போட இயலாமல் நொக்கியா நிறுவனம் பின்னடைவைச் சந்தித்தது. இந்த நிலையில் மீண்டும் சந்தையில் இடம்பிடிக்கும் வகையில் நொக்கியா களமிறங்கியுள்ளது.

அதற்காக சுமார் 60 வருடங்களாக பயன்படுத்தி வந்த லோகோவை நொக்கியா மாற்றியுள்ளது.

அதற்கமைய ஏற்கனவே இருந்த நொக்கியாவின் நீலநிற வடிவம் முற்றாக நீக்கப்பட்டு 5 விதமான வடிவங்களில் 'நொக்கியா' எனும் வார்த்தை வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

## பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் நகை வியாபார நிலையத்துக்கு அனுபவமுள்ள/ பழக விரும்பும் நகை விற்பனையாளர்கள் தேவை. காலை 10.00 மணி தொடக்கம் தொடர்பு கொள்ளவும்.

076 247 0257

## பெண் வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள கடை ஒன்றிற்கு 18- 30 வயதிற்குட்பட்ட பெண் தேவை. சம்பளம் 30. 0000 + மதிய உணவு

075 988 1000, 077 937 0000

(CS 23759)(3/6)

## உடனடி வேலை வாய்ப்புகள்

யாழ். நல்லூரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு

(City Tex - Nallur)

அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

சம்பளம் = 35000/=, வயது 18 - 25 வரை

021 221 6185, 077 293 5537

(cs 47410) (2,6)

## விசேட விலைக்கழிவு

ஏசியன்

தளபாட நிலையத்தின் விசேட விலைக்கழிவு

March 03rd, 04th, 05th

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

077 3583 879, 076 8219 416 0777 28 69 04

(CS 23771)1-6

வெளிநாடு செல்ல ஆர்வமுள்ளோர்களுக்கான இலவச மற்றும் சிறந்த முறை வழிகாட்டல் கருத்தரங்கு

CHER

FREE GUIDANCE SEMINAR

IELTS

Limited Seats only

திகதி :- 05.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் :- 09.00 - 11.00 am

இடம் :- இல.131, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

இக்கருத்தரங்கின் மூலம், கீழ்வரும் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- IELTS (Academic, General, Life Skills)
- Work Permit
- Student Visa
- Sponsership Visa

Free Entrance

இருக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் 04.03.2023 இற்கு முன்னர் முன்பதிவு செய்து உங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

021 221 0604 / 077 800 5204

No. 131, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 72 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும். வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 46 50 171, 076 911 9371

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 41 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச. தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 4350 614, 077 6385 683

(CS23770) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1931



மறைவு 27 . 02 . 2023

### செல்லப்பா கந்தசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சுதுமலை கிழக்கைப் பிறப்பிடமாகவும். உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று முன்தினம் (27.02.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும். கனகரட்ணம். நாகம்மா. இரத்தினபூபதி. குருசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்ற செல்லப்பாக்கியத்தின் அன்புக் கணவரும். உமாதேவி. சந்திரகுமார். கிரிஷா. யசோதா. வனஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும். பிரபாகரன். பவானிதேவி. இராஜகுமார். ஜெயராஜா. சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும். தர்ஷிகா. நிஷாந்திக்கா. கேஷிகா. கபிஷ்னா. அபிநாத். அஸ்விகா. அஸ்வினி. அஸ்மிதா. அனோஜன். அட்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பவாளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைப்பந்தி,
உடுப்பிட்டி.

(CS/22927)4,6

தகவல்:
குடும்பத்தினர்

077 440 0788, 021 205 5821

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.